# தினபூமி

thinaboomi.com

பூமி: 30 சுற்று: 205 சித்திரை 21 | TN-TVL/25/2012-2014

நெல்லை, ஞாயிறு, மே 04, 2025 | சென்னை | மதுரை | திருச்சி | கோவை | நெல்லை | சேலம் | வேலூர் | புதுச்சேரி | பக்கம் 8 | ₹ 3.00




**போப்பாகவே மாறிய அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்..! ஏ.ஐ. புகைப்படத்தால் சர்ச்சை**

...2-ம் பக்கம்


**கோவா: நெரிசலில் 7 பேர் பலி: ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திரமோடி இரங்கல்**

...3-ம் பக்கம்

**ஐ.பி.எல். வளர்ச்சி இந்தளவுக்கு இருக்கும் என்று நினைக்கவில்லை: கிரிக்கெட் வீரர் கோலி ஆச்சர்யம்**

...6-ம் பக்கம்










● சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு, ஐ.பெரியசாமி, எம்.பி.க்கள் டி.ஆர்.பாலு, கனிமொழி, ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், திருச்சி சிவா, அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தலைமைக்கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

### நம்மை வெல்ல முடியாதவர்களின், அச்சுறுத்தல்கள் மற்றும்

# மிரட்டல்களை அரசியல் ரீதியாக எதிர்கொள்வோம்

## தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பரபரப்பு பேச்சு

சென்னை, மே 04-

**அரசியல் ரீதியாக நம்மை வெல்ல முடியாதவர்கள், மிரட்டல்கள் மூலம் அசிங்கப்படுத்த நினைப்பர். அவர்களின் அரட்டல், மிரட்டல், உருட்டல்களுக்கான உண்மையான காரணம் மக்களுக்குத் தெரியும். எனவே, இந்த அச்சுறுத்தலை அரசியல் ரீதியாக எதிர்கொள்வோம் என்று தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.**

**பொதுக்குழு கூட்டம்...**

சென்னை தி.மு.க. தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நேற்று (சனிக்கிழமை) காலை நடைபெற்றது. தி.மு.க. தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் கட்சியின் வளர்ச்சிப் பணிகள் குறித்தும், தி.மு.க. பொதுக்குழு கூட்டம் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. மேலும் 4 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**தலைமை முடிவு...**

மேலும் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசுகையில், வருகிற சட்டப்பேரவைத் தேர்தலில் வேட்பாளர்கள் யார் என்பதை தலைமை முடிவு செய்யும். வெற்றி பெறுபவர்களே வேட்பாளராக நிறுத்தப்படுவர். தகுதியானவர்களுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படும். நிறுத்தப்படும் வேட்பாளர் வெற்றி பெற உழைக்க வேண்டியது உங்கள்(மாவட்டச் செயலாளர்கள்) கடமை. தடங்கல் என்பது எப்போதும் இருக்கும். அதனை உழைப்பால் வெல்லுங்கள்.

**வார்டுக்கும் செல்ல...**

அமைச்சர்கள் சென்னையில் இருப்பதைவிட பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று பணியாற்ற வேண்டும். எம்.எல்.ஏ.க்கள் தங்கள் தொகுதியில் ஒவ்வொரு வார்டுக்கும் செல்ல வேண்டும். நம்முடைய பலமே, நம்முடைய கழகக் கட்டுமானம் தான். இத்தகைய நிர்வாகக் கட்டமைப்பு எந்தக் கட்சிக்கும் கிடையாது. அந்த கட்டமைப்பை காலம்தோறும் புதுப்பித்துக் கொண்டே இருக்கிறோம். இருக்க வேண்டும்.

**பயப்படுகிறார்....**

அ.தி.மு.க.வை அடக்கிவிட்டது பா.ஜ.க. தமிழ்நாட்டில் எப்படியாவது காலூன்ற பா.ஜ.க. அனைத்துவிதமான அச்சுறுத்தலையும் செய்து அ.தி.மு.க.வை அடக்கிவிட்டது. எடப்பாடி பழனிசாமிக்கும் வேறு வழியில்லை. பா.ஜ.க. கூட்டணியை ஏற்றுக் கொள்ளாவிட்டால் சொந்தக் கட்சியில் அவர் தலைமைக்கே சிக்கல் வந்துவிடும் என பயப்படுகிறார். அரசியல் ரீதியாக நம்மை வெல்ல முடியாதவர்கள், மிரட்டல்கள் மூலம் அசிங்கப்படுத்த நினைப்பர். அவர்களின் அரட்டல், மிரட்டல், உருட்டல்களுக்கான உண்மையான காரணம் மக்களுக்குத் தெரியும். எனவே, இந்த அச்சுறுத்தலை அரசியல் ரீதியாக எதிர்கொள்வோம் என்று பேசினார்.

### முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் நடந்த

# தி.மு.க. மா.செ. கூட்டத்தில் 4 தீர்மானங்கள் நிறைவேற்றம்

சென்னை, மே 04-

**ஜூன் 1-ல் மதுரையில் பொதுக்குழு கூட்டம் நடத்தப்படும், பா.ஜ.க. அரசின் அதிகார அத்துமீறலை மக்கள் மன்றத்திலும் - சட்டத்தின் துணைக் கொண்டும் தி.மு.க. எதிர்கொள்ளும் உள்ளிட்ட 4 தீர்மானங்கள் தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.**

தேர்தல் மற்றும் கட்சிப் பணிகள் குறித்து ஆலோசிப்பதற்காக நேற்று (மே.3) காலை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், ஜம்மு - காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் நிகழ்த்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலில் உயிரிழந்த அப்பாவி பொதுமக்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. அதேபோல், முற்போக்கான சிந்தனைகளுடன் கடமையாற்றிய கத்தோலிக்கத் திருச்சபைத் தலைவர் போப் பிரான்சிஸ் மறைவுக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து 4 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றின் விவரம் வருமாறு:

தீர்மானம்: 1 - சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த வேண்டிய பொறுப்பு ஒன்றிய அரசுக்குத்தான் உள்ளது என்பதை உணர்த்திய முதல்வருக்கு பாராட்டுக்கள். அதுமட்டுமல்லாமல், "சட்டமியற்றும் அதிகாரம் சட்டமன்றத்திற்கே" - "மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கே - நிச்சயமாக ஆளுநருக்கு இல்லை" என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க உச்ச நீதிமன்றத் தீர்ப்பைப் பெற்றுள்ளார். மேலும், 5வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் முதல்வர் துணையாகச் செயலாற்றி வரும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் இம்மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் வாழ்த்தும் - பாராட்டும் - நன்றியும் தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம்: 2 - தி.மு.க. அரசின் சாதனைகளைப் பகுதி, ஒன்றிய, நகர அளவில், இளைஞர் அணியின் மூலம் வரப்பெற்ற 186 இளம் பேச்சாளர்கள் உள்ளிட்ட 443 பேச்சாளர்களின் பங்கேற்புடன், மொத்தம் 1,244 இடங்களில் "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு!" சாதனை விளக்கப் பொதுக் கூட்டங்களை நடத்திடுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

தீர்மானம்: 3 - தி.மு.க.வின் பொதுக்குழுக் கூட்டம் வருகின்ற ஜூன் 1-ஆம் நாள் கூடல் மாநகராம் மதுரையில் நடைபெறும் என்று இம்மாவட்டச் கழக செயலாளர்களின் இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

தீர்மானம்: 4 சி.பி.ஐ., அமலாக்கத் துறை, வருமான வரித் துறை போன்ற நடுநிலை தவறாது செயல்பட வேண்டிய அமைப்புகளை அ.தி.மு.க. போன்ற கட்சிகளை மிரட்டி கூட்டணிக்கு அமைக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு இந்த அமைப்புகளை ஈடுபடுத்தி வருகிறது.

தி.மு.க..வினர் மீது பழி வாங்கும் நடவடிக்கைக்காக அமலாக்கத் துறை போன்ற அமைப்புகளை ஒன்றிய பா.ஜக அரசு பயன்படுத்துவதை திராவிட முன்னேற்றக் கழகம் சட்டத்தின் துணைக் கொண்டு துணிச்சலுடன் எதிர்கொண்டு அதனை எதிர்த்து, நீதியை நிலைநாட்டிடவும் - மக்கள் மன்றத்தில் ஒன்றிய பாஜ. அரசின் அதிகார அத்துமீறலை எடுத்துரைத்திடவும் இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது. இவ்வாறாக 4 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

### இளநிலை மருத்துவப்படிப்புகளுக்கு

# இன்று 'நீட்' நுழைவு தேர்வு

## தமிழகத்தில் மட்டும் 1.50 லட்சம் பேர் எழுதுகிறார்கள்

புதுடெல்லி, மே 04-

**நாடு முழுவதும் இளநிலை மருத்துவப்படிப்புகளுக்கான 'நீட்' நுழைவு தேர்வு இன்று நடைபெறுகிறது. நாடு முழுவதும் 23 லட்சத்துக்கும் அதிகமானோர் எழுத இருக்கின்றனர். தமிழகத்தில் மட்டும் 1½ லட்சம் மாணவர்கள் நீட் தேர்வை எதிர்கொள்ள இருப்பதாக கூறப்படுகிறது.**

நாடு முழுவதும் உள்ள எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ், மற்றும் சித்தா, யுனானி, ஓமியோபதி, ஆயுர்வேதம் போன்ற மருத்துவ படிப்புகளில் சேர 'நீட்' நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அந்த தேர்வில் பெற்ற மதிப்பெண்ணை கொண்டே மருத்துவப்படிப்புக்கான மாணவர் சேர்க்கை நடத்தப்படுகிறது. அந்த வகையில், 2025-26-ம் கல்வியாண்டுக்கான நீட் நுழைவுத் தேர்வு இன்று (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 2 மணி தொடங்கி மாலை 5.20 மணி வரை நடைபெற இருக்கிறது. தேர்வை, நாடு முழுவதும் 23 லட்சத்துக்கும் அதிகமானோர் எழுத இருக்கின்றனர். தமிழகத்தில் மட்டும் 1½ லட்சம் மாணவர்கள் நீட் தேர்வை எதிர்கொள்ள இருப்பதாக கூறப்படுகிறது.

தமிழகத்தில் சென்னை, மதுரை, திருச்சி, நெல்லை உள்பட 31 மாவட்டங்களில் தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், புதிதாக உருவாக்கப்பட்ட திருப்பத்தூர், தென்காசி, ராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி உள்பட 7 மாவட்டங்களில் நீட் தேர்வு மையங்கள் அமைக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது. சென்னையில் மட்டும் 41 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. செல்போன் உள்பட மின்னணு சாதனங்களை தேர்வு அறைக்குள் கொண்டு செல்லக்கூடாது உள்ளிட்ட வழிமுறைகளை தேர்வர்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டும் என தேசிய தேர்வுகள் முகமை தெரிவித்திருக்கிறது. மாணவர்கள், கூடுதல் தகவல்களை http://neet.nta.nic.in என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம்.

இதற்கிடையே நீட் தேர்வு இன்று நடைபெற உள்ள நிலையில் தேர்வர்கள் கடைபிடிக்க வேண்டிய வழிகாட்டுதல்களை தேசிய தேர்வு முகமை வெளியிட்டுள்ளது.அதன் விவரம் வருமாறு;

* தேர்வுக்கூட அனுமதிச் சீட்டு (hall ticket) https://neet.nta.nic.in/ என்ற இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளsது. அதனை தேர்வர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

* தேர்வுக்கூட அனுமதி சீட்டை பதிவிறக்கம் செய்வதில் ஏதேனும் சிரமங்கள் என்றால் 011 40759000 அல்லது 011 69227700 என்ற தொலைபேசி எண்கள், neetug2025@nta.ac.in என்ற இமெயில் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

* தேர்வு நாளன்று, தேர்வர்கள் ஏற்கனவே வெளியிடப்பட்ட அதிகாரப்பூர்வ தேர்வு நேர அட்டவணையை பின்பற்ற வேண்டும். சரியான நேரத்தில் தேர்வு மையத்துக்கு வருவது அவசியம்.

•ஆண் தேர்வர்கள் பாதுகாப்பு மற்றும் சோதனை நடைமுறைகளுக்கு ஏற்ப எளிமையான, வசதியான ஆடைகளை அணிய வேண்டும். தேவையற்ற தாமதங்கள், தகுதியிழப்புக்கு வழிவகுக்கும் எந்த ஆடை அல்லது ஆபரணங்களை தவிர்க்க வேண்டும்.

**அனுமதிக்கப்பட்ட ஆடை நடைமுறைகள் (ஆண்-பெண்)**

* வெளிர்நிற அரைக்கை சட்டைகள், டி சர்ட்டுகள்(பெரிய பொத்தான்கள்,எம்பிராய்டரி கூடாது).

* எளிமையான கால் சட்டைகள்

* மெல்லிய காலணிகள்

**அனுமதிக்கப்படாத ஆடை நடைமுறைகள் (ஆண்)**

* முழு கைச்சட்டைகள் அணியக்கூடாது.

* பெரிய பொத்தான்கள் கொண்ட பைகள், ஆடைகள்.

•ஷூக்கள்.

•கடிகாரங்கள், வளையல்கள்,சங்கிலிகள், குளிர் கண்ணாடிகள்(சன் கிளாஸ்) போன்ற எந்த ஆபரணங்கள்.

**அனுமதிக்கப்படாத ஆடை நடைமுறைகள் (பெண்)**

* ஆபரணங்கள், அலங்காரங்கள் இல்லாமல் லேசான, எளிய மற்றும் வசதியான ஆடைகளை அணிந்து வர வேண்டும்.

* விரிவான வடிவமைப்புகள் இல்லாத வெளிர் நிற அரைக்கை குர்திகள்

# 'அக்னி நட்சத்திரம்' இன்று தொடக்கம்

## அடுத்த 25 நாட்களுக்கு வாட்டி வதைக்கும்

சென்னை, மே 04-

**அக்னி நட்சத்திரம் என்று அழைக்கப்படும் கத்திரி வெயில் இன்று தொடங்குகிறது. இதையடுத்து பொதுமக்கள் பின்பற்ற வேண்டிய அரசு வழிகாட்டு நெறிமுறை வெளியிடப்பட்டுள்ளது.**

தமிழ் பஞ்சாங்க அடிப்படையில், தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 4-ம் தேதி முதல் 28-ம் தேதி வரை 'அக்னி நட்சத்திரம்' என்று அழைக்கப்படும் 'கத்திரி வெயில்' காலம் கணக்கிடப்பட்டு வருகிறது. இந்த நிலையில் 25 நாட்களுக்கு நீடிக்கும் அக்னி நட்சத்திரம் இன்று தொடங்குகிறது.

கோடை காலத்தையொட்டி வரும் கத்திரி வெயில் காலத்தில் இயல்பைவிட வெப்பத்தின் தாக்கம் அதிகரித்து கோரத்தாண்டவம் ஆடும். அப்போதெல்லாம் தமிழ்நாட்டில் பல இடங்களில் உச்சபட்ச வெயில் பதிவாகும். அந்தவகையில் நடப்பாண்டில் கோடைகாலம் கடந்த மார்ச் மாதத்தில் இருந்தே வாட்டி வதைக்க தொடங்கிவிட்டது.

கத்திரி வெயிலின்போது வெப்பநிலை 84 டிகிரி முதல் 100 டிகிரி பாரன்ஹீட் வரை இருக்கும் என்பதால் பொதுமக்கள் கூடுதல் கவனத்துடன் இருக்க வேண்டும். பகல் பொழுதில் வெளியே நடமாடுவதை தவிர்க்கலாம். கோடை காலம் வந்தாலே அதிகளவு தண்ணீர் குடிப்பதுடன், ஐஸ் சர்பத், பழங்கள், மோர் சாதம் என குளிர்ந்த ஆகாரங்களை அதிகம் சாப்பிட வேண்டும். பருத்தி ஆடைகளை அணிவதுடன் வெளியே செல்லும்போது குடைகளை எடுத்து செல்வது நல்லது.

கடந்த ஆண்டு (2024) அக்னி நட்சத்திர காலத்தில் கரூரில் 111 டிகிரி வெயில் பதிவானதுதான் அந்த ஆண்டின் உச்சபட்சமாக பார்க்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு அந்த அளவுக்கு வெயில் பதிவாகாது என்ற வானிலை ஆய்வாளர்களின் பதில் ஆறுதலை கொடுக்கிறது.

இதற்கிடையை தமிழகத்தில் இன்று அக்னி நட்சத்திரம் தொடங்குவதால்

(கடைசி பக்கம் பார்க்க)

### சொத்து வரி மீண்டும் உயர்வா?

# தமிழ்நாடு அரசு மறுப்பு

சென்னை, மே 04-

**உள்ளாட்சி அமைப்புகள் சொத்து வரியை மீண்டும் 6 சதவிகிதம் உயர்த்தியுள்ளதாக நாளிதழ் ஒன்றில் இன்று செய்தி வெளியானது.;**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மீண்டும் 6 சதவிகிதம் சொத்து வரியை உயர்த்தியுள்ளதாக வெளியான நாளிதழ் ஒன்றில் நேற்று செய்தி வெளியானது. இந்த செய்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது, சொத்து வரி உயர்த்தப்படவில்லை என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒன்றிய அரசின் 15-வது நிதிக்குழுவின் நிபந்தனைகளின்படி, ஒவ்வொரு நகர்ப்புற அமைப்பும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியின் சதவிகிதத்தை ஒப்பிடுகையில் சராசரியாக 11.5 சதவிகிதம் சொத்துவரி வருவாயை உயர்த்தினால் மட்டுமே, உள்ளாட்சி அமைப்புகளுக்கு 15-வது நிதிக்குழுவின் மானியம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிபந்தனையைக் கருத்தில் கொண்டு 2024ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சொத்துவரி அரசாணை எண்.113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்ஏ4) துறை, நாள் 5.9.2024-ன்படி 6 சதவிகிதம் உயர்த்தப்பட்டது. அதன் பிறகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையினால் சொத்துவரி எதுவும் உயர்த்தப்படவில்லை. இந்நிலையில், 3.5.2025 நாளிட்ட ஒரு நாளிதழில் "எவ்வித அறிவிப்புமின்றி உள்ளாட்சி அமைப்புகள், 6 சதவிகிதம் சொத்து வரியை மீண்டும் உயர்த்தி அமலுக்கு வந்துள்ளதாக வெளியிடப்பட்டுள்ள செய்தி உண்மைக்கு புறம்பானதாகும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 2024 நீட் தேர்வில் முறைகேடு செய்த

# 14 மாணவர்கள் சேர்க்கை ரத்து - 26 பேர் சஸ்பெண்ட்


புதுடெல்லி, மே 04-

**நீட் தேர்வில் முறைகேடு தொடர்பாக 14 மாணவர்களின் சேர்க்கை ரத்து செய்யப்பட்டு 26 பேரை சஸ்பெண்ட் செய்து தேசிய மருத்துவ ஆணையம் நடவடிக்கை எடுத்துள்ளது.**

2024-ம் ஆண்டு நீட் தேர்வில் முறைகேடு, ஆள்மாறாட்டம், வினாத்தாள் கசிவு உள்ளிட்டவை நடைபெற்றது. சி.பி.ஐ., தேசிய தேர்வு முகமை இணைந்து நடத்திய விசாரணையில் இது தெரிய வந்தது. இந்த நிலையில் கடந்த ஆண்டு நீட் தேர்வு முறைகேடு தொடர்பாக மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2024-25 கல்வியாண்டுக்கான 14 மாணவர்களின் சேர்க்கையை ரத்து செய்து தேசிய மருத்துவ ஆணையம் (என்.எம்.சி.) நேற்று அதிரடியாக உத்தரவிட்டது. விதிமீறல்களுக்கு உடந்தையாக இருந்த 26 எம்.பி.பி.எஸ். மாணவர்கள் உடனடியாக சஸ்பெண்ட் செய்யப்பட்டனர். மேலும் முறைகேடுகளில் ஈடுபட்ட 42 பேர் மறுதேர்வு எழுத 3 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதோடு நீட் தேர்வு எழுதிய 215 தேர்வர்கள் மீது விசாரணை நடைபெற்று வருகிறது. 2025-26 கல்வியாண்டுக்கான நீட் தேர்வு இன்று நடைபெற உள்ள நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| 259.75 | 12.50 |
| பாயிண்ட் 80,501.99 | பாயிண்ட் 24,346.70 |



**தங்கம்**
1 சவரன் ₹70,040
1 கிராம் ₹8,755



**வெள்ளி**
1 கிலோ ₹10,800
1 கிராம் ₹108.00

**டாலர்** ₹84.58

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24


# போப்பாகவே மாறிய அமெரிக்க அதிபர் டிரம்ப்

## ஏ.ஐ. புகைப்படத்தால் சர்ச்சை

**வாஷிங்டன், மே 04-**

போப்பாகவே ஏ.ஐ. தொழில்நுட்பத்தில் மாற்றிய டிரம்ப் புகைப்படம் பெரும் சர்ச்சையை கிளப்பி உள்ளது.

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவரான போப் பிரான்சிஸ் (வயது 88), உடல் நலக்குறைவு காரணமாக கடந்த 21-ந் தேதி வாடிகனில் மரணம் அடைந்தார். அதனை தொடர்ந்து அவரது உடல் 26-ந் தேதி ரோமில் அடக்கம் செய்யப்பட்டது. போப் பிரான்சிஸ் மறைவை தொடர்ந்து புதிய போப் யார்? என்ற எதிர்பார்ப்பு உலகம் முழுவதும் எழுந்தது. இந்நிலையில் போப் பிரான்சிஸ் மறைவுக்குப் பிறகு வரும் 7ம் தேதி புதிய போப்பை தேர்வு செய்வதற்கான கர்தினால்களின் மாநாடு தொடங்க இருக்கிறது. இதற்காக வாடிகன் சிஸ்டைன் சிற்றாலயத்தில் 7-ந் தேதி கூடி தங்களுக்குள்ளே இருந்து ஒருவரை புதிய போப் ஆண்டவராக தேர்வு செய்கிறார்கள்.



இதனிடையே ரோமில் போப் பிரான்சிஸின் இறுதிச் சடங்கில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கலந்து கொண்டார். இந்த சூழலில், புதிய போப் தேர்வு குறித்து நகைச்சுவையாகப் பேசி இருந்தார். முன்னதாக கத்தோலிக்க திருச்சபையை யார் வழிநடத்த வேண்டும் என்பது குறித்த அவரது கருத்து கேட்கப்பட்டதற்கு டிரம்ப், "நான் போப் ஆண்டவராக இருக்க விரும்புகிறேன்..

அதுதான் எனது முதல் தேர்வாக இருக்கும்" என்றார். மேலும் போப் பிரான்சிஸுக்குப் பதிலாக யார் இருக்க வேண்டும் என்று கேட்டபோது, பதில் அளித்த டிரம்ப், நியூயார்க் வெளியே இருக்கும் ஒரு கார்டினல் எங்களிடம் இருக்கிறார், அவர் மிகவும் நல்லவர், எனவே என்ன நடக்கிறது என்று பார்ப்போம்" என்று கூறி இருந்தார்.

இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், தற்போது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் போப் ஆண்டவர் போல் உள்ள ஏ.ஐ. புகைப்படத்தை பதிவிட்டுள்ளார். இதனை சமூக வலைதளங்களில் பல்வேறு தரப்பினர் விமர்சனம் செய்து வருகின்றனர். மேலும் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள், டிரம்ப்பின் இந்த புகைப்படம் போப் ஆண்டவரையும், புதிய போப் தேர்வு செய்யும் நடைமுறையையும் அவமதிப்பதாக கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.இதனால் இந்த புகைப்படம் புதிய சர்ச்சையை கிளப்பி உள்ளது.

# சுதந்திர போராட்ட தியாகிக்கு வீடு: அரசு பரிசீலிக்க ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, மே 04-**

சுதந்திர போராட்ட தியாகிக்கு வீட்டு வசதி வாரியத்தில் வீடு ஒதுக்குவது குறித்து பரிசீலிக்குமாறு தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாடு துறைக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் அகில இந்திய சுதந்திர போராட்ட தியாகிகள் சங்கத்தின் மாநில துணை தலைவர் வி.கே.செல்லம் தாக்கல் செய்த மனுவில், "இந்திய ராணுவத்தில் பணியாற்றிய முன்னாள் ராணுவ வீரர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் வீடு ஒதுக்கீட்டில் ஒரு சதவீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. நானும் இந்திய தேசிய ராணுவத்தில் பணியாற்றியவன். இந்நிலையில் எனக்கு தியாகிகளுக்கான இட ஒதுக்கீட்டில் வீட்டு வசதி வாரியத்தில் வீடு ஒதுக்க கோரி அரசுக்கும், வீட்டு வசதி வாரிய தலைவருக்கும் மனு கொடுத்தேன். எனது மனுவை வீட்டு வசதி வாரிய தலைவர் கடந்த பிப்ரவரி 19-ம் தேதி நிராகரித்து உத்தரவிட்டார். எனவே, எனது மனுவை நிராகரித்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும். எனக்கு சுதந்திர போராட்ட தியாகிகளுக்கான ஒதுக்கீட்டில் வீடு ஒதுக்குமாறு வீட்டு வசதி வாரியத்திற்கு உத்தரவிட வேண்டும்" என்று மனுவில் கோரியிருந்தார்.

இந்த மனு நீதிபதி டி.பரத சக்ரவர்த்தி முன்பு விசாரணைக்கு வந்தது வழக்கை விசாரித்த நீதிபதி, இந்த விஷயத்தில் அரசு தனது அதிகாரத்தை பயன்படுத்தி மனுதாரருக்கு வீடு ஒதுக்கீடு செய்யலாம். எனவே, மனுதாரரின் மனுவை பரிசீலித்து அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீட்டில் சட்டத்திற்கு உட்பட்டு 8 வாரங்களில் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று உத்தரவிட்டு வழக்கை முடித்துவைத்தார்.

## மகளிர் விடியல் பயணத்திட்டத்தில்

# சென்னையில் 132.91 கோடி முறை பெண்கள் பயணம்

**சென்னை, மே 04-**

சென்னையில் மகளிர் விடியல் பயணத் திட்டத்தில் 132.91 கோடி முறை பெண்கள் பயணம் செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. சென்னையில் கடந்த ஏப்ரல் மாதத்தில் மட்டும் மகளிர் விடியல் பயணத் திட்டத்தில் 3.65 கோடி முறை பெண்கள் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

மகளிர் விடியல் பயணத் திட்டம் அறிமுகமானதில் இருந்து தற்போது வரை சென்னையில் மட்டும் சுமார் 132.91 கோடி முறை பெண்கள் பயணம் மேற்கொண்டுள்ளனர் என சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது. தமிழக அரசு, பெண்களின் நலனுக்காக பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அதில் மிக முக்கிய திட்டமாக, மகளிர் விடியல் பயணத்திட்டத்தின் கீழ் அரசு மாநகர பேருந்துகளில் மகளிர் கட்டணமின்றி பயணித்து வருகின்றனர்.

சமூக, பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கும் மற்றும் உயர்த்தும் நோக்கில் 2021-ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இந்தத் திட்டத்துக்கு தமிழக பெண்களிடம் பெரும் வரவேற்பு கிடைத்துள்ள நிலையில், இந்தப் பேருந்துகளில் பயணிக்கும் பெண் பயணிகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. பெண் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், சென்னை மாநகருக்குட்பட்ட பகுதிகளில் மகளிர் விடியல் பயணத்திட்டத்தின் கீழ் இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கையை மாநகர போக்குவரத்துக்கழகம் உயர்த்தி உள்ளது.

இந்த நிலையில், மகளிர் விடியல் பயணத் திட்டத்தின் கீழ், திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட நாள் முதல் தற்போது வரை சென்னை மாநகர விடியல் பயண பேருந்துகளில் சுமார் 132.91 கோடி முறை பெண்கள் பயணம் மேற்கொண்டுள்ளனர். கடந்த ஏப்ரல் மாதத்தில் மட்டும் 3.65 கோடி முறை பயணம் மேற்கொண்டுள்ளனர். மகளிர் விடியல் பயணத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்ட முதல் இதுவரை ஒரே நாளில் அதிகபட்சமாக கடந்த ஏப்ரல் 28-ம் தேதி 13.59 லட்சம் பயணிகள் பயணம் மேற்கொண்டுள்ளனர். இது கடந்த 2024-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பயணம் மேற்கொண்ட பயணிகளை விட 23 சதவீதம் அதிகமாகும்.

## போர் பதற்றத்திற்கு மத்தியில்

# பாக். ஏவுகணை சோதனை

**லாகூர், மே 04-**

போர் பதற்றத்திற்கு மத்தியில் 450 கிலோ மீட்டர் தூரம் வரை சென்று இலக்கை தாக்கி அழிக்கும் வல்லமை பெற்ற ஏவுகணை சோதனையை பாகிஸ்தான் நடத்தியுள்ளது.

ஜம்மு-காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டம் பஹல்காமில் உள்ள சுற்றுலா தலத்தில் கடந்த 22ம் தேதி பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் சுற்றுலா பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து பாகிஸ்தானுக்கு செல்லும் சிந்து நதியை இந்தியா நிறுத்தியுள்ளது. மேலும், பாகிஸ்தானியர்களை இந்தியாவில் இருந்து வெளியேற்றியுள்ளது. தூதரக நடவடிக்கையும் நிறுத்தப்பட்டுள்ளது. பாகிஸ்தான் செய்தி நிறுவனங்கள் இந்தியாவில் முடக்கப்பட்டுள்ளன. அதற்கு பதிலடியாக பாகிஸ்தானும் தங்கள் நாட்டில் இருந்து இந்திய தூதர்களை வெளியேறியுள்ளது. பாகிஸ்தானில் இருந்து இந்தியர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். இந்திய விமானங்கள் பாகிஸ்தான் வான் பரப்பை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த போர் பதற்றத்திற்கு மத்தியில் பாகிஸ்தான் ஏவுகணை சோதனை நடத்தியுள்ளது. தரையில் இருந்து ஏவப்பட்டு தரையில் உள்ள இலக்கை தாக்கி அழிக்கும் ஏவுகணையை பாகிஸ்தான் சோதனை நடத்தியுள்லது. இந்த ஏவுகணை 450 கிலோ மீட்டர் தூரம் வரை சென்று இலக்கை தாக்கி அழிக்கும் வல்லமை பெற்றதாகும். இந்த ஏவுகணை அணு ஆயுதத்தை தாக்கி செல்லும் திறன் கொண்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சத்தீஸ்கரில் நக்சல் சுட்டுக்கொலை

**சென்னை, மே 04-**

சத்தீஸ்கரில் தேடப்பட்ட நக்சல் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சத்தீஸ்கரில் ரூ.8 லட்சம் சன்மானம் அறிவித்து தேடப்பட்டு வந்த நக்சல் ஒருவர் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். பாதுகாப்புப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கரியாபாந்து மாவட்டத்தில் மோட்டி பானி கிராமத்தின் அருகிலுள்ள வனப்பகுதியில் நேற்றுமுன்தினம் (மே.2) மாலை நக்சல்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மத்திய ரிசர்வ் காவல் படை மற்றும் ஈ-30 படையினர் இணைந்து மேற்கொண்ட இந்த நடவடிக்கையில் அப்பகுதியில் பதுங்கியிருந்த நக்சல்களுடன் துப்பாக்கிச் சூடு நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதல்கள் முடிவடைந்த பின்னர் நக்சல்கள் பதுங்கியிருந்த இடத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டபோது, தாக்குதலில் பலியான நக்சல் ஒருவரின் இறந்த உடல் மற்றும் வெடிகுண்டுகள் உள்ளிட்ட ஆயுதங்கள் அங்கிருந்தது கண்டறியப்பட்டது. இதனைத் தொடர்ந்து, பாதுகாப்புப் படை அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையில் பலியானது ரூ.8 லட்சம் வெகுமதி அறிவித்து தேடப்பட்டு வந்த யோகேஷ் எனவும் அவர் நக்சல் அமைப்பின் மண்டல ஆணைய உறுப்பினராகச் செயல்பட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, சத்தீஸ்கரில் 2025-ம் ஆண்டு துவங்கியதிலிருந்து சுமார் 145 நக்சல்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்து அரச குடும்பத்துடன்

# சமரசம் செய்ய இளவரசர் ஹாரி விருப்பம்

**லண்டன், மே 04-**

அரச குடும்பத்துடன் இணைய விரும்புவதாக இளவரசர் ஹாரி தெரிவித்துள்ளார்.



இங்கிலாந்து மன்னர் சார்லஸின் இளைய மகன் இளவரசர் ஹாரி. தந்தை மற்றும் சகோதரர் வில்லியம் ஆகியோருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அரச குடும்பத்தில் இருந்து விலகுவதாக அறிவித்த ஹாரி தனது மனைவி, குழந்தைகளுடன் அமெரிக்காவில் வசித்து வருகிறார்.

இதற்கிடையே இங்கிலாந்து கோர்ட்டில் நடந்து வந்த தனது பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பான வழக்கில் இளவரசர் ஹாரி தோல்வி அடைந்தார். அவரது மனுவை கோர்ட்டு தள்ளுபடி செய்தது. கடந்த 2020-ம் ஆண்டு உள்துறை அமைச்சகம், ஹாரி இங்கிலாந்தில் இருக்கும்போது தானாகவே போலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டிய அவசியமில்லை என முடிவு செய்தது. இதை எதிர்த்துதான் ஹாரி வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த நிலையில் அரச குடும்பத்துடன் இணைய விரும்புவதாக ஹாரி தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் கூறியதாவது:-

எனது குடும்பத்தினருடன் சமரசம் செய்து கொள்ள விரும்புகிறேன். இனிமேல் தொடர்ந்து போராடுவதில் எந்த அர்த்தமும் இல்லை.

இந்த போராட்டத்தை என் தந்தை இன்னும் எவ்வளவு காலம் வைத்திருப்பார் என்று எனக்குத் தெரியவில்லை.

எனது போலீஸ் பாதுகாப்பு ரத்து செய்வதற்கான இங்கிலாந்து அரசாங்கத்தின் முடிவுக்கு எதிரான மேல்முறையீட்டில் தோல்வியடைந்தது என்னை பேரழிவிற்கு ஆளாக்கியுள்ளது. இந்த பாதுகாப்பு விஷயங்களால் என் தந்தை சார்லஸ் என்னுடன் பேசமாட்டார். ஆனால் நான் இனி சண்டையிட விரும்பவில்லை. ஒரு புத்தகம் எழுதியதற்காக என் குடும்பத்தில் சிலர் என்னை ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள். நிச்சயமாக, அவர்கள் பல விஷயங்களுக்கு என்னை ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள். ஆனால் என் குடும்பத்துடன் சமரசம் செய்து கொள்ள விரும்புகிறேன் என்றார்.

# காஸா மீது இஸ்ரேல் தாக்குதல்: 29 பாலஸ்தீனர்கள் உயிரிழப்பு


**காஸா, மே 04-**

காஸாவில் இஸ்ரேல் நடத்திய விமானத் தாக்குதல்களில் 29 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

மத்திய காஸாவில் உள்ள புரைஜ் அகதிகள் முகாமில் உள்ள ஒரு வீட்டின் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 9 பேரும் வடக்கு நகரமான பெய்ட் லாஹியாவில் உள்ள அல்-மஸ்ரி குடும்ப வீட்டை குறிவைத்து நடத்தப்பட்ட மற்றொரு தாக்குதலில் மேலும் 6 பேரும் கொல்லப்பட்டனர். அதேபோல் காஸா நகரில், ஒரு சமூக சமையலறையில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஆறு பேர் கொல்லப்பட்டதாக சிவில் பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும் காஸா பகுதி முழுவதும் மற்ற இடங்களிலும் இதேபோன்று நடந்த தாக்குதல்களில் 8 பேர் கொல்லப்பட்டதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தம் முறிந்த பிறகு காஸா மீது இஸ்ரேல் மீண்டும் நடத்திய தாக்குதல்களில் இதுவரை 2,326 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இத்துடன், காஸாவில் இஸ்ரேல் ராணுவம் சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேல் நடத்திவரும் தாக்குதலில் பலியானோரின் எண்ணிக்கை 52,418 ஆக உயர்ந்துள்ளது என்று ஹமாஸ் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**04-05-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** பொருள் இழப்பை தவிர்க்க எச்சரிக்கையுடன் இருக்கவும். சந்தேக உணர்வு, பயம் அதிகரிக்கும். வியாபாரப் பயணங்களில் எதிர்பார்த்த வருமானம் இருக்காது. பிடிக்காத உறவுகள் சந்திப்பதில் மகிழ்ச்சி குறையும்.

**ரிஷபம்:-** சகோதரர்களால் இலாபம் ஏற்படும். பிறருக்கு உதவும் தியாக மனப்பான்மையைக் கை விடுவது நல்லது. பெண்களின் அன்றாட வாழ்க்கையில் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது.

**மிதுனம்:-** தொழிலில் எதிர்பார்த்த இலாப வரவின்றி பணமுடை ஏற்படும். கல்வியில் முன்னேற்றத் தடைகள் ஏற்படலாம். சமாளிக்க முடியாத செலவுகள் ஏற்பட்டாலும் சரிகட்டிவிடுவார்கள்.

**கடகம்:-** தனவரவு ஓரளவு அதிகரிக்கும். பெற்றோர்களால் நன்மை பல பெறுவீர்கள். ஆராய்ச்சி மனப்பான்மையோடு செயல்படுவீர்கள். கடல் கடந்த விவகாரங்கள் வெற்றி அளிக்கும்.

**சிம்மம்:-** தங்கள் மனையாள் இனிய மாற்றங்களை விரும்புவார். அதனால், ஏற்படும் வீண் செலவுகள் பணமுடை ஏற்படும். சிலருக்கு உடலிலும், மனதிலும் ஒரு நிலையற்ற தன்மை நிலவும்.

**கன்னி:-** திருமணம் தள்ளிப் போகலாம். சுவையான உணவு கிடைக்கும். இன்று, கற்பனை உலகிலேயே பயணிப்பீர்கள். வியாபாரத்தில் நல்ல ஆதாயங்கள் குறையும்.

**துலாம்:-** தொழில், வியாபாரம் மூலம் அதிக இலாபம் எதிர்பார்க்க முடியாது. சிலருக்கு இலாபம் கிடைக்கும். தங்கள் புதிய சாதனையால் வீட்டில் தங்கள் மதிப்பு உயரும்.

**விருச்சிகம்:-** ஆரோக்கிய நிலை சீராக இருக்கும். ஏதாவது ஒரு நினைவில் மனம் உழல்வதால், தெய்வத்திடம் வேண்டுங்கள். பயணத் தடைகள் ஏற்படும். சூழ்நிலை மாற்றத்தை விரும்புவீர்கள்.

**தனுசு:-** நிம்மதியற்ற தன்மையால் மனக் குழப்பங்கள் அதிகரிக்கும். சிலருக்குப் பண இழப்புக்கள் ஏற்படும். கோபத்தால் சண்டை, சச்சரவுகள் ஏற்படும். அதன் காரணமாக சந்தோஷம் குறையும்.

**மகரம்:-** சிலருக்குக் காதல் உணர்வு தலை தூக்கும். அரசியல் மற்றும் பொது வாழ்க்கையில் ஆதாயம் அடையலாம். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும் என்று சொல்வதற்கில்லை.

**கும்பம்:-** தனவரவு ஓரளவு கூடும். நண்பர்களைச் சந்திக்கும் நிலை ஏற்படும், போக்குவரத்து தடைகளால், பயணங்கள் தொல்லை தரும். மருத்துவர்களுக்கு பெயரும் புகழும் கூடும்.

**மீனம்:-** குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. காரிய வெற்றி எட்டாக் கனியாகும். காரியங்களில், பயணங்களில் தடைகள் ஏற்படும். அஜீரணம் ஏற்படும்.

## உணவு பொருட்களை இருப்பு வைத்துக்கொள்ளுங்கள்:

# எல்லையில் மக்களை எச்சரித்த பாக்.

**லாகூர், மே 04-**

பாகிஸ்தான் ராணுவம் உள்ளூர் கிராம மக்களுக்கு ஆயுதப் பயிற்சியை அளித்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

காஷ்மீரில் நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சிந்து நதி நீர் ஒப்பந்தம் ரத்து, இந்தியாவில் இருந்து பாகிஸ்தானியர்கள் வெளியேற்றம் உள்ளிட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை நிறுத்த இந்தியா எடுத்த முடிவுக்கு பதிலடியாக இந்தியாவுடனான அனைத்து வர்த்தகத்தையும் பாகிஸ்தான் நிறுத்தி வைத்தது.

பாகிஸ்தான் தனது மருந்து மூலப்பொருட்களில் 30 முதல் 40 சதவீதம் வரை இந்தியாவை நம்பியுள்ளது. தற்போது இந்தியாவுடன் வர்த்தகத்தை நிறுத்தியதால் மருந்து பற்றாக்குறையில் சிக்கும் அபாயத்தில் பாகிஸ்தான் உள்ளது. இதையடுத்து மருந்து விநியோகத்தைப் பாதுகாக்க பாகிஸ்தான் 'அவசர' நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்த நிலையில், இந்தியாவின் பதிலடிக்கு பயந்து, எல்லைக்கட்டுப்பாட்டுக் கோட்டில் உள்ள 13 தொகுதிகளில் இரண்டு மாதங்களுக்கு தேவையான உணவு மற்றும் மருந்துப் பொருட்களை இருப்பு வைத்துக் கொள்ளுமாறு அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். இதனிடையே, பாகிஸ்தான் ராணுவம் உள்ளூர் கிராம மக்களுக்கு ஆயுதப் பயிற்சியை அளித்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

# இங்கிலாந்து மூதாட்டிக்கு உலகின் அதிக வயதுடைய மனிதர் பட்டம்

**இங்கிலாந்து, மே 04-**

உலகின் அதிக வயதுடைய மனிதர் என்ற பட்டம் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த மூதாட்டி ஒருவருக்கு சென்றுள்ளது.

உலகின் அதிக வயதுடைய மனிதர் என்று அறியப்பட்ட பிரேசில் நாட்டைச் சேர்ந்த கிறுஸ்தவ பெண் துறவியான இனாஹ் கானா பாரோ (வயது 116) கடந்த ஏப்.30 ஆம் தேதியன்று காலமானார். இந்நிலையில், அவருக்கு அடுத்து உலகின் அதிக வயதுடைய மனிதர் என்ற பட்டம் இங்கிலாந்தின் லண்டன் நகரத்தைச் சேர்ந்த ஈதல் கேடர்ஹாம் என்ற 115 வயது மூதாட்டிக்கு சொந்தமாகியுள்ளது.



தெற்கு இங்கிலாந்திலுள்ள ஷிப்டன் பெல்லிங்கர் எனும் கிராமத்தில் 1909 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21 ஆம் தேதியன்று பிறந்த ஈதல் கேடர்ஹாம், தனது வாழ்நாளில் இரண்டு உலகப் போர்களையும் சந்தித்துள்ளார். பயணம் செய்வதை அதிகம் விரும்பிய அவர் கடந்த 1927 ஆம் ஆண்டு தனது 18 ஆம் வயதில், ஆங்கிலேயர் ஆட்சியின் கீழிருந்த இந்தியாவுக்கு வந்துள்ளார். சுமார் 3 ஆண்டுகள் இந்தியாவிலிருந்து, ஒரு ஆங்கிலேய குடும்பத்தினரின் குழந்தைகளைப் பராமரிக்கும் வேலையைச் செய்த அவர் பின்னர் மீண்டும் தனது தாயகத்துக்கு திரும்பியுள்ளார்.

1931-ம் ஆண்டு ஹாங்காங்கில் பிரிட்டன் ராணுவத்தில் பணியாற்றிய நார்மன் என்பவரை சந்தித்து அவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். பின்னர், இந்தத் தம்பதிக்கு 2 மகள்கள் பிறந்த நிலையில் 1976 ஆம் ஆண்டு நார்மன் மரணமடைந்துள்ளார். தற்போது லண்டனிலுள்ள ஒரு முதியோர் காப்பகத்தில் வசித்து வரும் ஈதல், அவருக்கு கிடைத்துள்ள இந்தப் புதிய பட்டத்தை உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் கேக் வெட்டி கொண்டாடும் படங்கள் இணையத்தில் வெளியாகியுள்ளன.

தனது நீண்ட வாழ்வுக்கான ரகசியம் என்னவென்று கேட்டபோது, "வாக்குவாதம் செய்யாதீர்கள், நான் என்றும் வாக்குவாதம் செய்ய மாட்டேன், பிறர் பேசுவதைக் கவனித்துக்கொண்டு எனக்கு பிடித்ததை செய்வேன்" என அவர் கூறியுள்ளது அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. முன்னதாக, உலகிலேயே அதிக வயது வாழ்ந்தவர், சுமார் 122 ஆண்டுகள் 164 நாள்கள் வாழ்ந்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜீன் கால்மண்ட் என்ற பெண்தான் என கின்னஸ் உலக சாதனை நிறுவனம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானில் இருந்து

# அஞ்சல்கள் மற்றும் பார்சல்கள் பரிமாற்றத்தை நிறுத்த முடிவு

**சென்னை, மே 04-**

பாகிஸ்தானில் இருந்து அஞ்சல்கள் மற்றும் பார்சல்களில் பரிமாற்றம் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரில் பஹல்காம் பகுதியில் கடந்த 22-ந் தேதி சுற்றுலா பயணிகள் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பயங்கரவாதிகளின் கொடூர தாக்குதலுக்கு உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன. இந்த தாக்குதலில் பாகிஸ்தானை சேர்ந்த லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாத அமைப்பை சேர்ந்தவர்கள் ஈடுபட்டிருப்பது தேசிய புலனாய்வு பிரிவு (என்.ஐ.ஏ.) விசாரணையில் தெரியவந்துள்ளது.

பாகிஸ்தானின் தூண்டுதலின் பேரிலேயே தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி இருக்கலாம் என கூறப்படுகிறது. இந்நிலையில் பாகிஸ்தானுக்கு எதிராக பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், பாகிஸ்தானில் இருந்து அஞ்சல்கள் மற்றும் பார்சல்களின் பரிமாற்றத்தை நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசின் தபால் துறை அதிரடியாக அறிவித்துள்ளது. பாகிஸ்தானில் இருந்து வான் வழி மற்றும் தரைவழி மூலம் அனைத்து வகையான அஞ்சல்கள் மற்றும் பார்சல்களில் பரிமாற்றம் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

**மரம் மனிதனின் உரம்**

# இந்திய துறைமுகங்களில் பாக். கப்பல்களுக்கு தடை

**டெல்லி, மே 04-**

இந்திய துறைமுகங்களில் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த கப்பல்கள் நுழைய தடை விதிக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் பஹல்காம் தாக்குதலையடுத்து பாகிஸ்தான் மீது இந்தியா பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒருபகுதியாக, இந்திய கப்பல்கள் பாகிஸ்தான் துறைமுகங்களுக்குச் செல்லக்கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் சொத்துகள், சரக்குகள் மற்றும் துறைமுக உள்கட்டமைப்பைப் பாதுகாக்க வணிகக் கப்பல் சட்டம், 1958-ன் பிரிவு 411-ன் கீழ் உடனடியாக இந்த நடைமுறை அமலுக்கு வருகிறது. கடற்படையின் மூலமாக இந்திய வணிகத்தை ஊக்குவிப்பதும், கடற்படையின் பராமரிப்பை உறுதி செய்வதும் இந்தச் சட்டத்தின் நோக்கம்" என்று அமைச்சகம் கூறியுள்ளது. முன்னதாக, பாகிஸ்தானில் இருந்து அனைத்துப் பொருள்களின் இறக்குமதிக்கும் தடை விதித்துள்ள மத்திய அரசு, இந்த தடை உத்தரவு உடனடியாக அமலுக்கு வருவதாகவும் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

### பத்திரிகை சுதந்திர தினம்:
# பா.ஜ.க. மீது முதல்வர் ஸ்டாலின் விமர்சனம்

**சென்னை, மே 04-**



பத்திரிகை சுதந்திரத்தைக் காப்பது என்பது ஊடகங்களுக்காக மட்டும் அல்ல, குடிமக்கள் அனைவரின் கேள்வி கேட்கும், உண்மையை அறிந்துகொள்ளும், அதிகாரத்தை நோக்கி உண்மையை உரைக்கும் உரிமைக்கானதாக ஆகிறது என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

உலக பத்திரிகை சுதந்திர நாளையொட்டி தமிழக முதல்வர் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், ஊடக சுதந்திரத்துக்கான உலகத் தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் இடம் 151 என படுபாதாளத்தில் உள்ளது. காரணம் என்ன? ஏனென்றால், மத்திய பாஜக ஆட்சி கேள்விகளைக் கண்டாலே அஞ்சுகிறது. ஊடக அலுவலகங்களில் ரெய்டு நடத்துகிறது, செய்தியாளர்களைச் சிறையில் தள்ளுகிறது, பாஜக அரசின் ஊழல்கள், உரிமை மீறல்கள் மற்றும் பெரும்பான்மைவாதப் போக்கை அம்பலப்படுத்துவோர்களை அடக்குகிறது.

உலக பத்திரிகை சுதந்திர நாளான இன்று (நேற்று), யாருக்கும் அஞ்சாத ஊடகவியல் இல்லையென்றால் மக்களாட்சி இருளில் மாண்டு விடும் என்பதை நமக்கு நாமே நினைவூட்டிக் கொள்வோம். அதனால்தான், பத்திரிகை சுதந்திரத்தைக் காப்பது என்பது ஊடகங்களுக்காக மட்டும் அல்ல, குடிமக்கள் அனைவரின் கேள்வி கேட்கும், உண்மையை அறிந்துகொள்ளும், அதிகாரத்தை நோக்கி உண்மையை உரைக்கும் உரிமைக்கானதாக ஆகிறது'' என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

# தே.மு.தி.க.வில் இருந்து விலகுவதாக கூறவில்லை: நல்லதம்பி விளக்கம்

**சென்னை, மே 04-**

தே.மு.தி.க.வில் இருந்து ஒரு போதும் விலக மாட்டேன் என்று முன்னாள் எம்.எல்.ஏ. நல்ல தம்பி கூறியுள்ளார்.

தான் தே.மு.தி.க.விலிருந்து விலகுவதாக ஒருபோதும் கூறவில்லை என்றும், கட்சியிலிருந்து விலகுவதாக பொய்யான தகவலை பரப்பியுள்ளனர் என்றும் அவர் வீடியோ மூலம் விளக்கம் கொடுத்துள்ளார்.

அந்த விடியோவில் அவர் கூறியிருப்பதாவது, நான் அளித்த கடிதத்தில், பொறுப்பிலிருந்து விடுவிக்குமாறு கேட்டேன். விடுவிக்காதபட்சத்தில் நான் ஒதுங்கிக்கொள்வேன் என்றுதான் சொன்னேன். இது ஊடகங்களில் தவறாக பரப்பப்பட்டு, நான் கட்சியிலிருந்தே விலகுவதாகச் சொன்னார்கள். ஒரு காலமும் நான் என்னை அறிமுகப்படுத்திய விஜயகாந்த் கட்சியிலேயே தொடர்ந்து பயணிப்பேன். உயிர் மூச்சு உள்ளவரை அவரது தொண்டனாகவே இருப்பேன் என்று தெரிவித்துள்ளார்.

### சட்டவிரோதமாக தங்கியிருந்த
# ராஜஸ்தானில் 6 வங்கதேசத்தினர் கைது

**ஜெய்ப்பூர், மே 04-**

ராஜஸ்தான் மாநிலம் அஜ்மீரில் சட்டவிரோதமாக தங்கியிருந்த வங்கதேசத்தினர் 6 பேரை போலீசார் கைது செய்தனர்.

ராஜஸ்தான் மாநிலத்தில், நம் அண்டை நாடான வங்கதேசத்தை சேர்ந்தவர்கள் சட்ட விரோதமாக வசித்து வருவதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. இதன்படி, அஜ்மீரில் அதிரடி சோதனை நடத்திய போலீசார், சட்ட விரோதமாக வசித்து வருவதாக 2 ஆயிரத்தை மேற்பட்டோரை அடையாளம் கண்டனர்.

அவர்களின் ஆவணங்களை சரிபார்க்கும் பணியில் ஈடுபட்டதை அடுத்து, சட்டவிரோதமாக வசித்து வந்ததாக, வங்கதேசத்தினர் 6 பேரை போலீசார் கைது செய்தனர். ராஜஸ்தான் மாநில முதல்வர் பஜன் லால் சர்மாவின் அறிவுறுத்தல்களின் படி, சட்டவிரோத வங்கதேச நாட்டவர்களுக்கு எதிராக போலீசார் நடவடிக்கை எடுத்தனர்.

மாநிலத்தில் சட்டவிரோதமாக வசிக்கும் வங்கதேச நாட்டினரை நாடு கடத்துமாறு முதல்வர் பஜன்லால் சர்மா அதிரடி உத்தரவிட்டார். அதன் படி, அதற்கான நடவடிக்கைகளை போலீசார் எடுத்து வருகின்றனர்.

# கோவா கூட்ட நெரிசலில் 7 பேர் பலி: மாநில அரசு நிகழ்ச்சிகள் 3 நாள் ரத்து

**பனாஜி, மே 04-**

கோவாவில் கோயில் திருவிழாவில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 7 பேர் உயிரிழந்தது, 70-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்த துயர சம்பவத்தை தொடர்ந்து, அடுத்த மூன்று நாட்களுக்கு அரசு விழாக்கள் அனைத்தும் ரத்து செய்யப்படுவதாக மாநில அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து பொது நிர்வாகத் துறையின் துணைச் செயலாளர் ஷ்ரேயாஸ் டி சில்வா வெளிட்டுள்ள சுற்றறிக்கையில்,. 'ஸ்ரீகாவோவில் ஸ்ரீலைராய் தேவி கோயிலில் ஜாத்ரா திருவிழாவில் ஏற்பட்ட துயரமான கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்கள், அவர்களின் குடும்பத்தினர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் விதமாக அடுத்த மூன்று நாட்களுக்கு அரசு சார்பில் நடக்க இருக்கும் அனைத்து நிகழ்ச்சிகள் மற்றும் கொண்டாட்டங்களையும் ரத்து செய்யவோ அல்லது ஒத்திவைக்கவோ அறிவுறுத்தப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, கோவா முதல்வர் பிரமோத் சாவந்த் சம்பவம் நடந்த ஸ்ரீகாவோ பகுதிக்கு நேரில் சென்று ஆய்வு செய்தார். அதேபோல் கோவா அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் காயமடைந்தவர்களை நேரில் சென்று சந்தித்தார். பின்பு நெரிசல் சம்பவம் குறித்து கூறும்போது, பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வரும் காயமடைந்தவர்களையும் நான் சந்தித்தேன். இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்துமாறு கூறியுள்ளேன். இந்தச் சம்பவம் குறித்து பிரதமர் மோடி எனக்கு அழைத்து விவரங்களைக் கேட்டுக் கொண்டார்'' என்று தெரிவித்தார். கோவா மாநிலத்தில் உள்ள ஸ்ரீகாவோ பகுதியில் அமைந்துள்ளது ஸ்ரீ லைராய் தேவி கோவிலில் கூட்ட நெரிசலில் சிக்கி 7 பேர் உயிரிழந்தனர். 70-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

### உழைப்பவர்களுக்கு மட்டுமே சீட்:
# பணம் கொடுத்து ஏமாறவேண்டாம்; நிர்வாகிகளுக்கு இ.பி.எஸ் எச்சரிக்கை

**சென்னை, மே 04-**



அ.தி.மு.க.வில் உழைப்பவர்களுக்கு மட்டுமே சீட் வழங்கப்படும். பணம் பெற்றுக்கொண்டு சீட் வழங்குவதில்லை என எடப்பாடி பழனிசாமி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் செயற்குழு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு அவைத்தலைவர் தமிழ்மகன் உசேன் தலைமை தாங்கினார். அ.தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் பேசிய அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, 2026-ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் சீட்டுக்காக பணம் கொடுத்து ஏமாற வேண்டாம் என்று நிர்வாகிகளை எச்சரித்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

திருவள்ளூரில் ஒருவர் சீட்டிற்காக ரூ.3 கோடி ஏமாந்ததாகவும் எழுந்த தகவலையும், முன்னாள் அமைச்சர் ஒருவர் சட்டசபை தேர்தல் சீட்டிற்காக ரூ.3 கோடி அளித்து ஏமாந்ததையும், சரவணன் என்ற நபர் ஒருவர் இ.பி.எஸ்.-க்கு நெருக்கமானவர் என கூறி பணம் பெற்றதையும் சுட்டிக்காட்டி அவர் எச்சரிக்கை விடுத்து உள்ளார்.

அ.தி.மு.க.வில் உழைப்பவர்களுக்கு மட்டுமே சீட் வழங்கப்படும். பணம் பெற்றுக்கொண்டு சீட் வழங்குவதில்லை என திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். முன்னதாக, அ.தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் ரகசியமாக சென்று பா.ஜ.க.வுடன் கூட்டணியை இறுதி செய்தது ஏன் என்றும் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி விளக்கம் அளித்துள்ளார். பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி உருவாவதை தி.மு.க. விரும்பவில்லை. கூட்டணி விவகாரம் குறித்து அ.தி.மு.க.வினர் பொதுவெளியில் பேட்டி கொடுக்க வேண்டாம். அ.தி.மு.க. கூட்டணி மெகா கூட்டணியாக மாறும். கூட்டணிக்கு வரும் அனைவருக்கும் முழு ஒத்துழைப்பை கொடுக்க வேண்டும். பூத் கமிட்டி மிக மிக முக்கியம், அதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். பூத் கமிட்டியை முறையாக அமைக்காவிட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

### அங்கோலா பாதுகாப்பு படைக்கான
# கடன் அளவை உயர்த்தி பிரதமர் மோடி அறிவிப்பு

**டெல்லி, மே 04-**



மத்திய ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு அங்கோலா. அந்நாட்டின் ஜனாதிபதியாக ஜவா மனுவேல் கோன்கவாஸ் லவ்ரன்கோ செயல்பட்டு வருகிறார். இந்நிலையில், 4 நாட்கள் அரசு முறை பயணமாக லவ்ரன்கோ இந்தியா வந்துள்ளார்.

அவர் நேற்று பிரதமர் மோடியை சந்தித்தார். இந்த சந்திப்பின்போது இரு நாட்டு உறவு, பாதுகாப்பு, வர்த்தகம், டிஜிட்டல் உட்கட்டமைப்பு, தொழில்நுட்பம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து தலைவர்கள் ஆலோசனை நடத்தினர்.

இந்த சந்திப்பிற்குபின், அங்கோலா பாதுகாப்புப்படைக்கன கடன் அளவு வரையறை 1,650 கோடி ரூபாய் (200 மில்லியன் டாலர்கள்) வரை நீட்டிக்கப்படுவதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொள்ள அங்கோலா பாதுகாப்புப்படைக்கான கடன் அளவு 1,650 கோடி ரூபாய் வரை நீட்டிக்கப்படுகிறது என அவர் தெரிவித்துள்ளார்.

### கோவாவில் கூட்ட நெரிசலில் 7 பேர் பலி:
# ஜனாதிபதி, பிரதமர் மோடி இரங்கல்

**புதுடெல்லி, மே 04-**

கோவா கோவிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

கோவாவின் ஸ்ரீகாவோவில் உள்ள லைராய் தேவி கோவிலில் நேற்று அதிகாலையில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 7 பேர் உயிரிழந்தனர். மேலும் 30-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஷிர்காவ் கிராமத்தில் உள்ள லைராய் தேவி கோவிலில் நடைபெற்ற திருவிழாவில் கலந்து கொள்ள சுமார் 40 ஆயிரம் பக்தர்கள் கூடியிருந்தனர். இந்த நிலையில் சரிவான பாதை வழியாக அவர்கள் சென்றுகொண்டிருந்தபோது கூட்ட நெரிசல் ஏற்பட்டு ஒருவர் மீது ஒருவர் விழுந்தனர். இதில் 7 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இந்த நிலையில் கோவிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக ஜனாதிபதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள பதிவில், ''கோவாவின் ஷிர்காவ் நகரில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி பலர் உயிரிழந்த சம்பவம் வருத்தமளிக்கிறது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில், ''கோவாவின் ஷிர்காவ் நகரில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி பலர் உயிரிழந்தது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்கு எனது இரங்கல். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையட்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு உள்ளூர் நிர்வாகம் உதவி செய்து வருகிறது'' என்று தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு பா.ஜ.க. நிர்வாகிகளுடன் ஜே.பி.நட்டா முக்கிய ஆலோசனை



**சென்னை, மே 04-**

சென்னையில் தமிழக பா.ஜ.க. நிர்வாகிகளுடன் கட்சியின் தேசிய தலைவர் ஜே.பி.நட்டா முக்கிய ஆலோசனை நடத்தினார்.

சென்னை தாம்பரத்தில் உள்ள ஒரு தனியார் பல்கலைக்கழக நிறுவனத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்க பா.ஜ.க. தேசிய தலைவர் ஜே.பி.நட்டா, சென்னை வந்துள்ளார். நேற்று முன்தினம் இரவு சென்னை வந்த அவரை பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், எம்.எல்.ஏ. வானதி சீனிவாசன், மூத்த தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன், தமிழிசை சவுந்தரராஜன் உள்பட பலர் வரவேற்றனர்.

இந்நிலையில் சென்னையில் தமிழக பா.ஜ.க. மாநில மையக்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டம், பா.ஜ.க. தேசிய தலைவர் ஜே.பி.நட்டா முன்னிலையில், பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் அவர்கள் தலைமையில், மாநில மேலிட இணை பொறுப்பாளர் பி.சுதாகர் ரெட்டி,

தேசிய மகளிர் அணி தலைவி வானதி சீனிவாசன், முன்னாள் மாநில கவர்னரும், மாநில தலைவரும் தமிழச்சி சவுந்தரராஜன் மற்றும் மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

இந்த கூட்டத்தில் சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொள்வதற்கான பணிகள் உள்ளிட்டவை குறித்து ஆலோசனை நடத்தப்பட்டதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக அ.தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணி உருவானதைத் தொடர்ந்து கூட்டணியை விரிவாக்கம் செய்து பலப்படுத்துதல், கூட்டணி கட்சி நிர்வாகிகளிடம் ஒற்றுமையை ஏற்படுத்துதல் உள்ளிட்டவை குறித்து ஆலோசனை நடத்த உள்ளதாகவும், பா.ஜ.க.வினர் மற்றும் கூட்டணிக் கட்சிகளை அரவணைத்துச் செல்வது தொடர்பாக ஆலோசனை நடத்தப்பட உள்ளதாக தகவல் வெளியாகி இருந்தது.

### 2-வது நாளாக தொடர்ந்த
# அங்கன்வாடி ஊழியர்கள் போராட்டம்


**சென்னை, மே 04-**



மே மாதம் முழுவதும் விடுமுறை கோரி அங்கன்வாடி ஊழியர்கள் 2-வது நாளாக பல்வேறு இடங்களில் போராட்டம் நடத்தி வருகின்றனர். காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டும், மே மாதம் முழுவதும் கோடை விடுமுறை விட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி அங்கன்வாடி ஊழியர்கள் நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) முதல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று முன்தினம் காலை தொடங்கிய போராட்டம் நேற்று 2 ஆவது நாளாகத் தொடர்ந்தது. நேற்று முன்தினம் இரவும் பல பகுதிகளில் ஊழியர்கள் காத்திருப்புப் போராட்டம் நடத்தினர். தொடர்ந்து நேற்றும் தமிழகம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் அங்கன்வாடி ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தலையில் முக்காடு போட்டு, ஒப்பாரி வைத்து நூதன முறையில் அங்கன்வாடி ஊழியர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதேபோன்று திருப்பூரிலும் அங்கன்வாடி ஊழியர்கள் கும்மியடித்தும் ஒப்பாரி வைத்தும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். முன்னதாக, அரசு ஏழை, எளிய குழந்தைகளின் நலனுக்காக, அவர்களுக்கு தொடர்ந்து ஊட்டச்சத்து வழங்குவதை உறுதி செய்வதற்காக, முறையற்ற போராட்டங்களில் ஈடுபடும் குழந்தைகள் மையப் பயணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் மீது சட்டப்படியான கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் கீதாஜீவன் எச்சரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### ரெட்ரோ விழாவில் அவதூறு பேச்சு?
# நடிகர் விஜய் தேவரகொண்டா விளக்கம்

**சென்னை, மே 04-**



'ரெட்ரோ' படவிழாவில் தான் பேசியது சர்ச்சையான நிலையில் அதுகுறித்து நடிகர் விஜய் தேவரகொண்டா விளக்கமளித்துள்ளார்.

நடிகர் சூரியாவின் 'ரெட்ரோ' திரைப்படத்தின் விழா தெலங்கானாவின் ஹைதரபாதில் நடைபெற்றது. அந்த விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட நடிகர் விஜய் தேவரகொண்டா பஹல்காமில் தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகளை, பழங்குடியின மக்களுடன் ஒப்பிட்டு பேசியதாகக் கூறி அவர் மீது வழக்கறிஞர் ஒருவர் புகாரளித்துள்ளார். இந்நிலையில், இதுகுறித்து தனது எக்ஸ் சமூக வலைதளப் பக்கத்தில் நடிகர் விஜய் தேவரகொண்டா கூறியதாவது:

எந்தவொரு சமூகத்தையும் குறிவைத்து புண்படுத்துவது எனது நோக்கமில்லை. முக்கியமாக பட்டியலின பழங்குடியின மக்களை. அவர்கள் மீது நான் அளவுக்கடந்த மரியாதை வைத்துள்ளதுடன், அவர்களை நம் நாட்டின் ஓர் முக்கிய அங்கமாக நான் கருதுகிறேன். 'டிரைப்' (பழங்குடியினர்) என நான் குறிப்பிட்ட வார்த்தையானது, பல நூறாண்டுகளுக்கு முன்பு தனித்தனி இனக்குழுக்களாக இருந்து அடிக்கடி மோதலில் ஈடுபட்ட மனிதர்களைக் குறிக்க வரலாறு, அகராதி ரீதியான அர்த்ததில் மட்டுமே பயன்படுத்தினேன். ஆனால், அது பழங்குடியின மக்களைக் குறிக்க 20-ம் நூற்றாண்டின் இடையில் அறிமுகப்படுத்தப்பட்டு 100 ஆண்டுகள் கூட முழுமையடையாத 'ஷெடியூல்டு டிரைப்' (பட்டியலின பழங்குடிகள்) -ஐ குறித்தானது அல்ல. நான் பேசிய கருத்தில் ஏதேனும் தவறாகப் புரிந்துக்கொள்ளப்பட்டிருந்தாலோ அல்லது யாரேனும் காயப்பட்டிருந்தாலோ அதற்கு என் வருத்தத்தை தெரிவித்து கொள்கிறேன். என அவர் பதிவிட்டுள்ளார்.

முன்னதாக, அவர் மீது ஹைதரபாதின் எஸ்.ஆர். நகர் காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில், இந்த விவகாரம் குறித்து உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனக் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

### இந்தியா தாக்குதல் நடத்தும் அபாயம்:
# எல்லையோரங்களில் உள்ள பயங்கரவாத முகாம்களை காலி செய்தது பாகிஸ்தான்

**புது டில்லி, மே 04-**

இந்தியா - பாகிஸ்தான் இடையே போர்ப்பதற்றம் உருவாகியிருக்கும் நிலையில் இந்தியா எதிர்பாராத தாக்குதல் நடத்தக்கூடும் என்பதால் எல்லையோர பயங்கரவாத முகாம்களை பாகிஸ்தான் காலி செய்துவிட்டது.

பாகிஸ்தான் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீர் பகுதிகளில் பல்வேறு பயங்கரவாத முகாம்கள் அமைக்கப்பட்டு இந்தியா - பாகிஸ்தான் சர்வதேச எல்லை வழியாக இந்தியாவுக்குள் ஊடுருவ என்னேரமும் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பர்.

ஜம்மு பகுதியைச் சுற்றி இதுபோன்ற மிகப்பெரிய மூன்று பயங்கரவாதிகள் ஊடுருவும் தளங்கள் இருந்துள்ளதை பாதுகாப்புப் படையினர் உறுதி செய்திருக்கிறார்கள்.

லஷ்கர்-ஏ-தொய்பா உள்ளிட்ட பயங்கரவாத அமைப்புகளைச் சேர்ந்த தலா பத்து பயங்கரவாதிகள் இந்த தளங்களில் தங்க வைக்கப்பட்டிருப்பார்கள். அந்த வகையில் ஏப்ரல் 22ஆம் தேதி வரை அங்கு ஆள் நடமாட்டம் இருந்துவந்த நிலையில், பாகிஸ்தான் ராணுவத்தால் இயக்கப்பட்டு வந்த தளங்கள் தற்போது காலியாக இருப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

கடந்த 2019ஆம் ஆண்டு பாலாகோட்டில் உள்ள பயங்கரவாதிகள் முகாம் மீது இந்திய விமானப் படை, அதிரடியாக அந்நாட்டு எல்லைக்குள் நுழைந்து தாக்குதல் நடத்திய பெரிய அளவில் பயங்கரவாதிகளைக் கொன்று குவித்து விட்டு வந்தது.

இந்த நினைவு பாகிஸ்தானுக்கு இருக்கும் என்பதால், அதுபோன்றதொரு தாக்குதலை மீண்டும் இந்தியா நடத்தக்கூடும் என்று கருதியே பயங்கரவாதத் தளங்கள் காலி செய்யப்பட்டிருக்கலாம் என்றும், சில காலம் பல்வேறு பகுதிகளில் பதுங்கியிருந்தவிட்டு மீண்டும் இங்கு வரலாம் என்றும் இந்திய மூத்த உளவுத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

### பஹல்காம் பயங்கரவாதிகள் குறித்த தகவல்:
# இலங்கை சென்ற விமானத்தில் சோதனை

**கொழும்பு, மே 04-**

சென்னையிலிருந்து இலங்கை சென்ற ஸ்ரீலங்கன் விமானத்தில் பஹல்காம் தாக்குதல் பயங்கரவாதிகள் சென்றிருக்கலாம் என்ற அடிப்படையில் சோதனை நடத்தப்பட்டது.

ஜம்மு - காஷ்மீரின் பஹல்காம் சுற்றுலா தளத்தில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் ஈடுபட்ட ஆறு பயங்கரவாதிகளும் சென்னையிலிருந்து விமானம் மூலம் இலங்கை தப்பியிருக்கலாம் என்று இந்திய புலனாய்வுப் பிரிவு அளித்த தகவலையடுத்து சனிக்கிழமை, ஸ்ரீலங்கன் விமான நிலையத்தில் சிறப்புச் சோதனை நடத்தப்பட்டுள்ளது.

இது குறித்து இலங்கை காவல்துறை செய்தித் தொடர்பாளர் கூறுகையில் இந்தியா தரப்பிலிருந்து, 6 பயங்கரவாதிகள் விமானத்தில் தப்பிச் செல்லும் வாய்ப்பு இருப்பதாக முன்னெச்சரிக்கை செய்யப்பட்டது. இதையடுத்து சென்னையிலிருந்து வந்த விமானம், பண்டாரநாயகே விமான நிலையத்தில் தரையிறங்கியதும் தேடுதல் பணி நடத்தப்பட்டது. இந்த சிறப்புச் சோதனையானது, இந்தியாவில் தேடப்பட்டு வரும் குற்றவாளிகள் விமானத்தில் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், சென்னை கட்டுப்பாட்டு மையத்தின் அறிவுறுத்தல்படி, உள்ளூர் அதிகாரிகள் ஒத்துழைப்போடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் காரணமாக, இந்த விமானம் அடுத்து சிங்கப்பூர் புறப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எப்படியிருந்தாலும், எங்களது பயணிகள் மற்றும் விமான ஊழியர்களின் பாதுகாப்புதான் எங்களுக்கு மிகவும் முக்கியம். அதனை உறுதி செய்ய அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்படும் என்று உறுதி அளித்துள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



சென்னை பட்டினப்பாக்கம் பகுதியில் மீனவ மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட பூர்வீக வாழ்விடங்களை தமிழ்நாடு அரசு அம்மக்களிடம் மீள ஒப்படைக்க வேண்டும். அதுவரை மீனவ மக்களுக்காகக் கட்டப்பட்ட புதிய குடியிருப்புகளில் அவர்களை குடியமர்த்த அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**- சீமான்**




தனியார் பள்ளிகளில் கல்வி உரிமைச் சட்டத்தின்படி மாணவர்களுக்கு இலவசக் கல்வி வழங்குவதையே நிறுத்தி விட அரசு முடிவு செய்திருப்பதாக பரவும் செய்திகள் மக்களின் ஐயத்தை அதிகரிக்கின்றது. எனவே மாணவர் சேர்க்கைக்கான அறிவிக்கையை உடனடியாக வெளியிட்டு, விண்ணப்பங்களையும் பெற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**- ராமதாஸ்**



பிரதமர் மோடி இலங்கை சென்றபோது மீனவர்கள் பிரச்சனையின் முக்கிய அம்சங்கள் குறித்து இருதரப்பும் விரிவாக ஆலோசனை செய்ததாகக் கூறப்பட்டது. அதை உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வந்து இருநாட்டு மீனவர்கள் சந்திப்பை ஏற்பாடு செய்ய வேண்டும். மீனவர்களின் பாதுகாப்பை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும்.

**- செல்வப்பெருந்தகை**



பிரதமர் மணிப்பூரைத் தொடர்ந்து தவிர்த்து வருகிறார். அவர் மாநிலத்தைச் சேர்ந்த யாரையும் இதுவரை சந்திக்கவில்லை. அவர் உலகம் முழுவதும் பயணம் செய்துகிறார், ஆனால் பிரச்னைக்குரிய மாநிலத்தைப் பார்வையிட ஆர்வம் காட்டவில்லை. மணிப்பூர் சூழ்நிலையை நிர்வகிப்பதில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தோல்வியடைந்துவிட்டார்.

**- ஜெய்ராம் ரமேஷ்**

# தென்காசி மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் சார்பில் 75 குழந்தைகளுக்கு காசோலைகள்

## கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் வழங்கினார்



**தென்காசி மே.04**

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலகின் சார்பில் மாவட்ட நிதி ஆதரவு திட்டத்தின் கீழ் 75 குழந்தைகளுக்கு கலெக்டர் ஏ.கே. கமல்கிஷோர், காசோலைகளை வழங்கினார்.

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கீழ், மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலகின் சார்பில் மாவட்ட நிதி ஆதரவு திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 75 குழந்தைகளுக்கு கூட்டாண்மை சமூகப்பொறுப்பு நிதியிலிருந்து கலெக்டர் ஏ.கே. கமல்கிஷோர், காசோலைகளை வழங்கினார்.பின்னர் கலெக்டர் தெரிவித்ததாவது,

அரசு அலுவலர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களும் இதுபோன்று குழந்தைகளுக்கு நிதியுதவி வழங்கிட முன்வரவேண்டும் என கலெக்டர் தெரிவித்தார்.மேலும், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள்துறையின் கீழ் இயங்கும் மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலகின் மூலமும் அரசு அலுவலர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களும் இதுபோன்று குழந்தைகளுக்கு நிதியுதவி வழங்கிட முன்வரவேண்டும்கேட்டுக் கொள்ளப்பட்டது..

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயசந்திரன்,ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னான்டோ, மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலுவலர் கவிதா, மாவட்ட நிதி ஆதரவு திட்ட ஒப்புதல் குழு உறுப்பினர்களாகிய உதவி ஆணையர் (கலால்) ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர்(பொ)(கணக்கு) எபனேசர், தொழிலாளர் உதவி ஆணையர் திருவள்ளுவன், உதவி செயற்பொறியாளர் (தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்) நெல்லைமதி, இணை இயக்குநர் (பொது மேலாளர்) மாவட்ட தொழில் மையம் மாரியம்மாள் மற்றும் நிதி ஆதரவு மற்றும் வளர்ப்பு பராமரிப்பு ஒப்புதல் குழு உறுப்பினர்களாகிய இளைஞர் நீதிக்குழும உறுப்பினர்கள், குழந்தை நலக்குழு தலைவர் (ம)உறுப்பினர்கள், சுமதி,சமூகநல அலுவலர்(பொ), ராஜி ஷோகோ நிறுவனம், நிதி ஆதரவாளர்களாகிய ஓம் பிரணவா ஆசிரம நிர்வாகி, செல்வராணி ஜவுளி கடை நிர்வாகி, நிதி ஆதரவாளர்கள், குழந்தைகள் மற்றும் குழந்தைகள் பெற்றோர்/பாதுகாவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதியில் சிப்காட் தொழில் பூங்கா அமைக்கப்படும் என்ற அறிவிப்பு

## அமைச்சர் டி.ஆர்.பி ராஜாவிற்கு முக்கனிகளை அளித்து நன்றி தெரிவித்த ராஜா எம்எல்ஏ



**சங்கரன்கோவில். மே.4.**

2025 - 2026 மானிய கோரிக்கையில் தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தொகுதிக்கு ரூ.300 கோடி மதிப்பீட்டில் முதலீடுகளை ஈர்த்து சுமார் 3000 பேர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்யும் வகையில் சிப்காட் தொழில் பூங்கா அமைய அறிவிப்பு வெளியிட்ட தொழிற்துறை அமைச்சர் டி.ஆர்.பி ராஜாவிற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் சென்னையில் அவரை திமுக தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ தனது விளை நிலங்களில் விளைந்த முக்கனிகளை வழங்கி நன்றி தெரிவித்தார்.

தலைமை செயற்குழு உறுப்பினர் யூ எஸ் டி சீனிவாசன், மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் டாக்டர் செண்பக விநாயகம், ஒன்றிய செயலாளர் பெரியதுரை, நகர செயலாளர் பிரகாஷ், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் உதயகுமார், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் பசுபதி பாண்டியன் மற்றும் வடக்கு மாவட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# தோவாளை மலர் சந்தையில் ரூ.2.12 கோடி மதிப்பில் கூடாரம் அமைக்கும் பணி: கலெக்டர் ஆர்.அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு



கன்னியாகுமரி,மே.04-

கன்னியாகுமரி மாவட்ட வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் தோவாளை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தோவானை மலர் சந்தையில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் கூடாரத்தினை கலெக்டர் ஆர்.அழகுமீனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்-

தமிழ்நாடு முதலமைச்சர் கன்னியாகுமரி மாவட்டத்திற்குகென பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை வழங்கி வருகிறார்கள்.

அதன்ஒருபகுதியாக தமிழ்நாட்டிலேயே மிகவும் பிரசித்திப்பெற்ற தோவாளை மலர் சந்தையினை மேம்படுத்தும் வகையிலும், மலர்கள் விற்பனை செய்பவர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையிலும், பாதுகாப்பு தன்மையுடன் மலர்களை விற்பனை செய்ய தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் கீழ் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் ஒப்புதல் பெற்று ரூ.2.12 கோடி மதிப்பில் மேற்கூரை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் இப்பணியினை இம்மாத இறுதிக்குள் முடித்து, மலர் விற்பனையாளர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர துணை இயக்குநர் வேளாண் விற்பனை அலுவலர், செயற்பொறியாளர் மற்றும் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு கலெக்டர் ஆர்.அழகுமீனா, தெரிவித்துள்ளார்கள்.

தொடர்ந்து தோவாளை வட்டாரத்துக்குட்பட்ட வீரமார்த்தாண்டபுரம் பகுதியில் வசித்து வரும் திருநங்கைகளை கலெக்டர் ஆர்.அழகுமீனா, நேரில் சந்தித்து, குறைகள் மற்றும் வாழ்வாதாரத்தினை கேட்டறிந்தார்கள். மேலும் தமிழ்நாடு அரசால் திருநங்கையர்களுக்காக வழங்கப்படும் அனைத்து நலத்திட்ட உதவிகளையும் உடனுக்குடன் வழங்க வேண்டுமென வட்டாட்சியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

நடைபெற்ற ஆய்வுகளில் துணை இயக்குநர் கீதா (வேளாண் விற்பனை), தோவாளை வட்டாட்சியர் கோலப்பன், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# பெருங்குளம் செங்கோல் ஆதீன திருமடத்தின் குரு முதல்வர் குரு பூஜை





**தூத்துக்குடி.மே.04.**

பெருங்குளத்தில் உள்ள தலைமை திருமடத்தில் பெருங்குளம் திருக்கயிலாய பரம்பரை செங்கோல் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீ சத்திய ஞான தரிசினிகள் குருபூஜை நடைபெற்றது.

முன்னதாக ஆதிகாலை நீடாமங்கலம் சுவாமிநாதன் குழுவினரின் மங்கள இசையுடன் குருபூஜை நிகழ்வு துவங்கியது. தூத்துக்குடி தேவார இசைப்பள்ளி முதல்வர் சுப்ரமணிய ஓதுவாரின் திருமுறை விண்ணப்பம் நடைபெற்றது. தொடர்ந்து ஆன்மார்த்த மூர்த்தி வழிபாடும், பெருங்குளம் சித்தர் தபோவனத்தில் உள்ள குருமூர்த்த திருக்கோவில்களில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

ஆதீன திருமடத்தில் உள்ள ஞானப்பிரகாசர் அரங்கத்தில் பெருங்குளம் திருக்கயிலாய பரம்பரை செங்கோல் ஆதீனம் 103வது குருமகா சந்நிதானம்ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக சத்திய ஞான பரமாச்சார்ய சுவாமிகள் ஆதீன குருமுதல்வருக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் ஆராதனைகள் நடத்தினார்.

இலண்டன் முருகன் கோவில் உதவி அர்ச்சகர் கணேஷ் குருக்கள் ஆன்மீக பணிகளை பாராட்டி ரூ.5ஆயிரம் பொற்கிழியும், "சைவ சமய சேவா ரத்தினம்" என்ற விருதும், சென்னை வ.உ.சி நற்பணி மன்ற தலைவர் பம்மல் ராஜ்குமார் ஆன்மீகம் மற்றும் சமுதாய பணிகளை பாராட்டி ரூ.5ஆயிரம் பொற்கிழியும், "சாதனை சக்கரவர்த்தி" என்ற விருதும், பிள்ளையார்பட்டி சிவஸ்ரீ அண்ணா இணைய தள அறக்கட்டளையில் இருந்து திருநெல்வேலி சுவாமி ஸ்ரீ நெல்லையப்பர் தேவஸ்தான ஸ்தானீகர் பிச்சையா மூர்த்தி பட்டர் ஆன்மீக பணிகளை பாராட்டி 5ஆயிரம் பொற்கிழியும், "சிவாகம ரத்தினம்" என்ற விருதும், இலண்டன் சிவஞான சுந்தரம் தம்பு ஆன்மீக பணிகளை பாராட்டி 5ஆயிரம் பொற்கிழியும், "ஆன்மீக செம்மல்" என்ற விருதும், சென்னை M.V.ஜெயசங்கர் நிறுவிய சிவசுந்தரி அறக்கட்டளையில் இருந்து காஞ்சிபுரம் திருஞான கதிர்வேல் சுப்ரமணியம் திருமுறை பணிகளை பாராட்டி 5ஆயிரம் பொற்கிழியும், 'திருமுறை இசை வாரிதி" என்ற விருதும், தூத்துக்குடி புனிதர் பேரவை அறக்கட்டளையில் இருந்து இலண்டன் இரவீந்திரன் ஆன்மீக பணிகளை பாராட்டி 5ஆயிரம் பொற்கிழியும், "நற்பணி நாயகர்" என்ற விருதும், தூத்துக்குடி சூ.சுப்பையா பிள்ளை - ஈஸ்வரம் அம்மாள் நினைவு கல்வி உதவித்தொகை ஆண்டுதோறும் வழங்குவதற்காக ரூ.50ஆயிரம் நிரந்தர வைப்பு நிதியாக வழங்கிய தூத்துக்குடி சு.மீனாட்சிநாதன் அவர்களுக்குபொன்னாடை போர்த்தி ஆசிர்வதித்தார்கள்.

எட்டையபுரம் அடியவர்க்கு அடியவர் திருக்குழாம் சார்பாக "உழவாரமும் தேவாரமும்" என்ற நூலும், நற்குடி வேளாளர் முத்தமிழ் மன்றம் சார்பாக "திருவழுதீச்சுரப்பதிகம்" ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டது. மதியம் பக்தர்களுக்கு மாகேஸ்வரபூஜை நடைபெற்றது.


மாலையில் பெருங்குளம் திருவழுதீஸ்வரர் ஆலயத்தில் ஆதீனகர்த்தர் பெரு வழிபாடற்றலும், ஆதீன குரு முதல்வர் சிவிகையில் பட்டணப் பிரவேசமும் நடைபெற்றது. இரவில் குருமகா சந்நிதானம் சிவஞான கொலுக் காட்சியுடன் குருபூஜை நிறைவு பெற்றது.

குருபூஜை விழாவிற்கான ஏற்பாடுகளை குருமகா சந்நிதானம் அருளாணையின் வண்ணம் காறுபாறு அழகிய திருச்சிற்றம்பலமுடைய தம்பிரான் செய்திருந்தார்.



**சென்னையில் அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதியை தென்காசிதெற்குமாவட்டதிமுகசெயலாளர்வே.ஜெயபாலன் பொன்னாடை அணிவித்து மரியாதை நிமித்தமாக சந்தித்தார்**

# சித்திரை திருவிழா: பூப்பல்லக்கில் சுவாமி, அம்பாள் வீதி உலா



**சங்கரன்கோவில், மே. 4**

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சங்கரநாராயண சாமி கோவிலில் சித்திரை திருவிழா தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டிற்கான திருவிழா கடந்த மே 1ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. சித்திரை திருவிழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் இரவு சுவாமி அம்பாள் பூம்பல்லக்கில் வீதி உலாவரும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதனை முன்னிட்டு கோவிலில் இருந்து தொடங்கிய வீதி உலா ரதவீதி வழியாக மீண்டும் கோவிலை சென்றடைந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். சிகர நிகழ்ச்சியான தேரோட்டம் மே 9ஆம் தேதி வருகிற வெள்ளிக்கிழமை காலை நடைபெற உள்ளது விழாவிற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகத்தினர் செய்து வருகின்றனர்.

# திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு பால்குடம், காவடி மற்றும் அலகு குத்தி பொது திரிசுதந்திரர்கள் நேர்த்திக்கடன்



**திருச்செந்தூர், மே.04-**

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு பொது திரிசுதந்திரர்கள் சார்பில் பக்தர்கள் பால்குடம், காவடி மற்றும் அலகு குத்தியும் தங்கள் வேண்டுதலை நிறைவேற்றினர்.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு பொது திரிசுதந்திரர்கள் சார்பில் வளர்பிறை சுக்ல சஷ்டியை முன்னிட்டு 46வது ஆண்டாக இன்று காலை அருள்தரும் ஆனந்தவல்லி அம்பாள் சமேத அருள்மிகு சிவக்கொழுந்தீஸ்வரர் கோயிலிலிருந்து விரதமிருந்த ஏராளமான பக்தர்கள் பால்குடம், காவடி, அலகு மற்றும் சிறிய முதல் 16 அடி வரையிலான வேல் குத்தினர். அந்த பக்தர்கள் மேளதாளம் முழங்க எட்டு வீதி வழியாக வந்து திருக்கோயில் சேர்ந்தனர்.

தொடர்ந்து மூலவருக்கு அபிஷேகம் செய்யப்பட்டது. மாலையில் திருக்கோயில் கடற்கரையில் ஏராளமான பக்தர்கள் பூக்குழி இறங்கியும் வேண்டுதலை நிறைவேற்றினர்.

ஏற்பாடுகளை பொது திரிசுதந்திரர்கள் சபையினர் செய்திருந்தனர்.

### தூத்துக்குடி மாவட்டத்தில்

# காவல் நிலையங்களில் புகார் பதிவு செய்யவில்லை என்று தகவல் வந்தால் உடனடி நடவடிக்கை

## எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் எச்சரிக்கை

**தூத்துக்குடி.மே.04.**

தூத்துக்குடி மாவட்டத்தில் காவல் நிலையங்களில் புகார் பதிவு செய்யவில்லை என்று ஏதேனும் புகார் வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று எஸ்பி ஆல்பர்ட் ஜான் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் சமீபத்தில் சில சம்பவங்கள் காவல் துறைக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் தகவல்கள் வெளியானது. ஆனால் அந்த சம்பவங்களில் போலீசார் மீது எந்தவித தவறும் இல்லை என்பதும், அந்த சம்பவங்களில் நடந்த உண்மைத் தன்மை குறித்து விளக்கப்பட்டு உள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் அனைத்து காவல் நிலையங்களிலும் வரவேற்பாளர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர். இதனால் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை வரவேற்பாளர்கள் பணியில் இருப்பார்கள்.

இதனால் மக்கள் காவல் நிலையங்களில் மனு கொடுக்க செல்லும்போது அனைத்து மனுக்களும் கம்ப்யூட்டரில் பதிவு செய்து ரசீது கொடுக்கப்படும்.

இதனால் காவல் நிலையங்களில் புகார் மனு பெற மறுத்து நிராகரிப்பது குறைந்துள்ளது. அதுபோன்று புகார் பதிவு செய்யவில்லை என்று ஏதேனும் புகார் வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாவட்டத்தில் சட்டவிரோதமாக மதுபானங்கள் விற்பனை செய்வதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன்படி நேற்று சுமார் 700 மதுபாட்டில்களை பறிமுதல் செய்து உள்ளோம். மாவட்டத்தில் காவல்துறையில் சுமார் 250 காலிப் பணியிடங்கள் உள்ளன. மாவட்டத்தில் சப்-இன்ஸ்பெக்டர்கள் தலைமையில் 16 காவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. இதில் 13 காவல் நிலையங்களை இன்ஸ்பெக்டர் தலைமையில் செயல்படும் வகையில் தரம் உயர்த்த பரிந்துரை செய்து உள்ளோம். இதற்கான உத்தரவுகள் விரைவில் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாவட்ட எல்லைகளில் உள்ள சோதனைச்சாவடிகளில் முழுநேரம் போலீசார் சோதனை செய்து வருகின்றனர். அதேபோன்று உட்கோட்ட அளவிலான சோதனைச் சாவடிகளில் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள நேரங்களில் சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்தார்.



**சென்னையில் திமுக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலையை தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வே.ஜெயபாலன் பொன்னாடை அணிவித்து மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.**

# தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகத்தில் 3-வது வடக்கு சரக்குதளம் ஆழப்படுத்தும் பணிகள் நிறைவு

**தூத்துக்குடி.மே.04.**

தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகத்தில் 3-வது வடக்கு சரக்கு தளம் ஆழப்படுத்தும் பணிகள் நிறைவு பெற்றுள்ளது.

தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகத்தில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் நடந்து வருகின்றன. அதன்படி ரூ.253 கோடியே 57 லட்சம் செலவில் வடக்கு சரக்கு தளம்-3-ஐ 14.20 மீட்டர் ஆழப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது.

இதற்காக ராட்சத எந்திரம் மூலம் ஆழப்படுத்தும் பணி நடந்தது. இந்த பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு உள்ளது. இதனால் வடக்கு சரக்குதளம் 3-ல் 14.20 மீட்டர் மிதவை ஆழம் கொண்ட கப்பல்கள் அனுமதிக்கப்பட உள்ளன. மேலும் மே 2025 முதல் நவீன துறைமுக நகரும் கிரேன்கள் உதவியுடன் சரக்கு ஏற்றுதல் மற்றும் இறக்குதல் பணிகள் தொடங்க உள்ளன. இந்த ஆழப்படுத்தும் பணியில் இருந்து பெறப்பட்ட மண்ணை கொண்டு துறைமுகத்துக்கு 11 எக்டேர் நிலப்பரப்பும் உருவாக்கப்பட்டு உள்ளது. இந்த நிலம் சரக்கு சேமிப்புக்கு பயன்படுத்தப்பட உள்ளது. இதன் மூலம் துறைமுகத்தின் முழுமையான செயல்திறனும், சரக்குகள் பரிமாற்ற திறனும் அதிகரிக்கும் என்று தகவல் வெளியாகி உள்ளது..

தென்காசி மாவட்டத்தில்

# தனியார் பள்ளி பேருந்துகளின் தரம் குறித்து கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் நேரில் ஆய்வு



**தென்காசி மே.04:**
தென்காசி மாவட்டத்தில் உள்ள தனியார் பள்ளி பேருந்துகளின் தரம் குறித்துகலெக்டர் ஏ.கே. கமல்கிஷோர், ஆய்வு மேற்கொண்டார்.

தென்காசி இ.சி.ஈ.அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் தென்காசி வட்டார போக்குவரத்து அலுவலக எல்லைக்கு உட்பட்ட தனியார் பள்ளி வாகனங்களின் தரம் குறித்த வருடாந்திர ஆய்வு கலெக்டர் ஏ.கே. கமல்கிஷோர், தலைமையில் நடைபெற்றது.

பின்னர் கலெக்டர் தெரிவித்தாவது,

தென்காசி மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் தனியார் பள்ளி பேருந்துகள் ஆய்வு செய்யப்படும். அதனடிப்படையில் தனியார் பள்ளி பேருந்துகளில் வேக கட்டுப்பாட்டு கருவி, முதலுதவி பெட்டிகள், இருக்கை வசதிகள் மற்றும் பேருந்துகளின் தரம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. பள்ளி வாகனங்களில் அதிக ஒலி எழுப்பக் கூடிய ஒலிப் பான்களை அகற்றும்படியும் அறிவுறுத்தப்பட்டது. தென்காசி, ஆலங்குளம், உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 463 பள்ளி பேருந்துகளும், தென்காசி வட்டார பகுதிகளில் இருந்து 400க்கும் மேற்பட்ட தனியார் பேருந்துகளும் இந்த ஆய்வில் பங்கேற்றன என கலெக்டர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், மாவட்ட கல்வி அலுவலர் மாரியப்பன், வட்டார போக்குவரத்து அலுவலர் (பொறுப்பு) செல்வி, மோட்டார் வாகன ஆய்வாளர் மணி பாரதி, ஆலங்குளம் மோட்டார் வாகன ஆய்வாளர் கனகவள்ளி மற்றும் போக்குவரத்து ஆய்வாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



**தென்காசி கிழக்கு ஒன்றியம் இலஞ்சி பேரூர் இளைஞர் அணி சார்பாக கலைஞர் நீர் மோர் பந்தலை தெற்கு மாவட்ட செயலாளர் வே. ஜெயபாலன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர் டாக்டர் கலை கதிரவன் ஆகியோர் திறந்து வைத்து பொதுமக்களுக்கு மோர், தர்பூசணி பழங்களை வழங்கினர். உடன் ஒன்றிய செயலாளர் அழகு சுந்தரம், இலஞ்சி பேரூர் செயலாளர் முத்தையா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி.ஆர்.கிருஷ்ணராஜா, துணை அமைப்பாளர் சுப்பிரமணியன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்**

# இலஞ்சி பாரத் வித்யா மந்திர் பள்ளி மாணவி தேசிய அளவில் சாதனை



குற்றாலம் மே.04:
கோலின்ஸ் வெளியிட்டாளர்களால் நடத்தப்பட்ட கோலின்ஸ் விண்டர் டேல்ஸ் சீசன் 3 பள்ளி மாணவர்களுக்காக கதை எழுதும் போட்டி நடத்தியது. இப் போட்டியானது 7 முதல்11வரை ஒரு நிலையினரும் 12 முதல் 16 வரை இரண்டாவது நிலையினர் என இரு நிலையில் நடத்தப்பட்டது. இப்போட்டியில் பாரத் வித்யா மந்திர் பள்ளியில் இருந்து 8 மாணவர்கள் கலந்து கொண்டனர்.இதில் முதல் நிலை பிரிவினருக்கான கதை எழுதும் போட்டியில் இலஞ்சி பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளியில் தொடக்கநிலை பிரிவில் ஐந்தாம் வகுப்பு படிக்கும் பள்ளி மாணவி மிருதளா துரை தேசிய அளவில் 2 வது இடத்தைப் பிடித்து சாதனை படைத்துள்ளார். சாதனை படைத்த பள்ளி மாணவிக்கு பள்ளி கல்வி குழும தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி கிருஷ்ணன், முதல்வர் வனிதா மற்றும் ஆசிரியர்கள் பாராட்டு தெரிவித்தனர்.

# சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ள சிலம்பக்கலை மாணவர்களை கலெக்டர் கவுரவப்படுத்த எஸ்டிபிஐ வலியுறுத்தல்

**தென்காசி மே.04**
எஸ்டிபிஐ கட்சியின் தென்காசி மாவட்ட தலைவர் திவான் ஒலி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

தென்காசி மாவட்டம் மத்தாளம் பாறையில் உடற்பயிற்சியை ஊக்குவிக்கும் வகையிலும்,போதை பொருள் ஒழிப்பு சம்மந்தமாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் "தமிழன் போர் முறை சிலம்பம் ஸ்போர்ட்ஸ் அகாடமி " சார்பில்

சிலம்பம் சுற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் தென்காசி மாவட்டம் கடையநல்லூர், புளியங்குடி மற்றும் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த நூறு மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு சிலம்பக்கலையில் ஏழு நுட்பங்களை பயன்படுத்தி ஏழு மணிநேரம் இடைவெளி இல்லாமல் தொடர்ச்சியாக சிலம்பம் சுற்றி உலக சாதனை படைத்துள்ளனர். ஏற்கனவே ஆறு மணி நேரம் சிலம்பம் சுற்றிய உலக சாதனையை முறியடிக்கும் விதமாக நடைபெற்ற இந்நிகழ்ச்சி சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றள்ளது மாவட்டத்திற்கே பெருமை சேர்க்கும் நிகழ்வாகும். ஆகவே இந்த சாதனையில் ஈடுபட்ட மாணவ, மாணவிகளை ஊக்குவிக்கும் விதமாக தென்காசி மாவட்ட ஆட்சியர் நேரில் அழைத்து கவுரவிக்க வேண்டும் என எஸ்டிபிஐ கட்சியின் சார்பில் கேட்டுக்கொண்டுள்ளார்

# காங்கிரஸ் தொழிலாளர் யூனியன் அலுவலகம்: தென்காசியில் பழனி நாடார் எம்எல்ஏ திறந்து வைத்தார்



தென்காசி மே 04:
தென்காசியில் டி சி டி யு, ஐ என் டி யு சி, தமிழ்நாடு காங்கிரஸ் தொழிலாளர் யூனியன் தென்காசி மாவட்ட அலுவலக திறப்பு விழா ஹவுசிங் போர்டு காலனி அருகில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு பொதுச் செயலாளர் செங்கை கண்ணன் தலைமை வகித்தார். தென்காசி மாவட்ட காங்கிரஸ் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான எஸ் பழனி நாடார் ரிப்பன் வெட்டி புதிய அலுவலகத்தை திறந்து வைத்து குத்துவிளக்கு ஏற்றி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக காங்கிரஸ் மாவட்ட பொருளாளர் முரளி ராஜா, முன்னாள் எம்பி ராமசுப்பு, முன்னாள் மாவட்ட காங்கிரஸ் தலைவர் கொடி குறிச்சி முத்தையா, மாநில செயலாளர் ஆலங்குளம் செல்வராஜ், முன்னாள் மாநில துணைத்தலைவர் மோகன் அருணாச்சலம், மாநில செயற்குழு உறுப்பினர்கள் மாடசாமி, காந்திமதி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை தலைவர் சிவராமகிருஷ்ணன், முன்னாள் யூனியன் சேர்மன் சட்டநாதன், பொதுச் செயலாளர்கள்

ஏஜிஎம். கணேசன், சந்தோஷ், செங்கோட்டை நகர தலைவர் ராமர் வட்டார தலைவர்கள் பெருமாள், கதிரவன், மகேந்திரன் பேச்சாளர் ஆய்க்குடி பெரியசாமி, தாயார் தோப்பு ராமர்,சகோதரி சண்முகசுந்தரி, சித்திக், சேர்மக்கனி கவுன்சிலர் ரபீக், ராஜீவ் காந்தி, சிறுபான்மை பிரிவு மாவட்ட தலைவர் சலீம், ஆயிரப்பேரி லட்சுமணன், அமானுல்லா உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். முடிவில் பொதுச் செயலாளர் கண்ணன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# காய்கறி விதைகள் கண்காட்சி



தென்காசி மே.04:
கன்னியாகுமரி மாநகரில் சிறப்பான காய்கறி விதைகள் கண்காட்சியை வ உ சிதம்பரநாதர் வேளாண்மை கல்லூரி கிள்ளிகுளம் மாணவர்கள் நடத்தினர்.

உள்ளூர் விவசாயிகளையும், தோட்டக்கலை ஆர்வலர்களையும் ஊக்குவிக்கும் நோக்கமும் மற்றும் பல்வேறு வகையான காய்கறி விதைகளை ஒரே இடத்தில் காணவும், அவற்றைப் பற்றி தெரிந்து கொள்ளவும் இது ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்தது. கண்காட்சியில் பார்வைக்கு தக்காளி, கத்தரி, மிளகாய், வெண்டைக்காய், அவரை, பீன்ஸ், கேரட் முள்ளங்கி ,பீட்ரூட் மற்றும் பல விதமான காய்கறிகளின் விதைகளை விவசாயிகள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர். கீரை வகைகள் முக்கியமாக: பசலைக்கீரை, தண்டுக்கீரை, பொன்னாங்கண்ணி கீரை, அரைக்கீரை, மற்றும் சிறுகீரை பார்வைக்கு வைக்கப்பட்டிருந்து.

மேலும், புதிய விவசாய தொழில்நுட்பங்கள் மற்றும் இயற்கை விவசாய முறைகள், வீட்டு/சமையலறை தோட்டம் பற்றியும் மாணவர்கள் விவசாயிகளுக்கு விளக்கமளித்தனர்.

விவசாயிகள் தங்கள் நிலத்தில் உள்ள பிரச்சனைகள், பயிர் மேலாண்மை முறைகள் மற்றும் உரங்கள் பயன்பாடு குறித்து கேட்டறிந்தனர். அவர்களுக்கு ஏற்ற ஆலோசனைகளையும், தீர்வுகளையும் மாணவர்கள் வழங்கினர். இது விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. புதிய விதைகள் மற்றும் தொழில்நுட்பங்களைப் பற்றி அறிந்து கொள்ளவும், சக விவசாயிகளுடன் கலந்துரையாடவும் இது ஒரு சிறந்த தளமாக இருந்தது. கல்லூரியின் முதல்வர் முனைவர் தேரடிமணி மற்றும் பேராசிரியர்கள் காளிராஜன், ரமேஷ் மற்றும் ஆரோக்கிய ஸ்டீபன் ராஜ் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி மாணவர்கள் இக்கண்காட்சியை நடத்தினர்.

# காஷ்மீரில் பயங்கரவாத தாக்குதல்: தென்காசி மாவட்ட பாஜக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்



**தென்காசி மே.04:**
காஷ்மீரில் பஹல்காமில் பாகிஸ்தான் தீவிரவாதிகளால் சுட்டு படுகொலை செய்யப்பட்ட அப்பாவி இந்தியர்கள் 27 பேர் ( வெளிநாட்டவர் 2 உட்பட) புகைப்படங்களுக்கு மலர் அஞ்சலி , மௌன அஞ்சலி செலுத்து நிகழ்வு புளியங்குடி நகர் பாஜக சார்பாக நடைபெற்றது.அதனை தொடர்ந்து பாகிஸ்தான் தீவிரவாதிகளை கண்டித்தும் தீவிரவாதத்திற்கு எதிராக குரல் கொடுக்காத இண்டியா கூட்டணி, திராவிட மாடல் திமுக அதன் கூட்டணி கட்சிகளை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு புளியங்குடி நகர் தலைவர் ஆர்த்தி தலைமை தாங்கினார்.,

பாஜக தென்காசி மாவட்டத் தலைவர் ஆனந்தன்அய்யாசாமி கண்டன சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட நிர்வாகிகள் பால குருநாதன், பாலகிருஷ்ணன் ராதாகிருஷ்ணன், புலிக்குட்டி, மகேஸ்வரி, சுப்பிரமணியன் முன்னாள் நகர் நிர்வாகிகள் நீராத்திலிங்கம்,மாரீஸ் கணேசன்,ராமசாமி, அருணாசலம், குருசெல்வம், சண்முகையா,திருநாவுகரசு, திருமலைக்குமார், சண்முகையா, அஸ்வதிமாரியப்பன், மாரியப்பன், உமாதேவி, பொன்னுதாய், மாரியம்மாள், பூபதி ராஜா, திருமலை கணேசன், ஒன்றிய தலைவர்கள் , உதயகுமார் ,சிவா, சுப்பிரமணியன் ஊராட்சி மன்றத் தலைவர்கள் இராம்குமார், முப்புடாதி, முன்னாள் ஒன்றிய தலைவர்கள் சண்முகராஜ் , தர்மர் கிளை தலைவர்கள், நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, நகர் அணி,பிரிவு நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்

# ஊட்டியில் அங்கன்வாடி பணியாளர்கள் போராட்டம்

**ஊட்டி, மே 04-**
காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் அங்கன்வாடி ஊழியர்கள் கடந்த சில மாதங்களாக பல்வேறு கட்ட போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். இந்த நிலையில் நேற்று முதல் தமிழகம் முழுவதும் போராட்டம் தீவிர படுத்தப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக நீலகிரி மாவட்டம் ஊட்டி கலெக்டர் அலுவலகத்தில் அங்கன்வாடி ஊழியர்கள் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். அங்கன்வாடி பணியாளர்கள் சங்க மாவட்ட தலைவர் கவிதா தலைமை வகித்தார். செயலாளர் சசிகலா மற்றும் இணை செயலாளர் விஜயா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இந்த காத்திருப்பு போராட்டத்தில் சிஐடியு மாவட்ட தலைவர் சங்கரலிங்கம் கலந்துக் கொண்டு பேசினார். போராட்டத்தின் போது, கோரிக்கைகளை வலியுறுத்தி அங்கன்வாடி பணியாளர்கள் கோஷங்களை எழுப்பினர்.இது குறித்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறியதாவது:-

அங்கன்வாடி பணியாளர்களுக்கு மே மாதம் கோடை விடுமுறையை முழுமையாக வழங்க வேண்டும். நீலகிரி மாவட்டத்தில் காலியாக உள்ள அங்கன்வாடி ஊழியர்கள் காலிப்பணியிடங்களை முழுமையாக நிரப்ப வேண்டும். பல்வேறு குளறுபடிகளை உருவாக்கும் டிஎச்ஆர் திட்டத்தை திரும்ப பெற வேண்டும். நீலகிரி மாவட்டத்தில் அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர்களை பழிவாங்கும் நோக்கில் செயல்படும் மாவட்ட ஒருங்கிணைப்பாளரை மாற்ற வேண்டும். பணி நிரந்தரம் செய்து முறையான காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். ஓய்வு பெறும் போது பணிக்கொடையாக ரூ.10 லட்சம் வழங்க வேண்டும். குடும்ப ஓய்வூதியமாக மாதந்தோறும் ரூ.12 ஆயிரம் வழங்க வேண்டும். பேஸ் கேப்சியர் முறையை ரத்து செய்ய வேண்டும். இந்த கோரிக்கைகளை விரைவில் நிறைவேற்றாவிட்டால்; அடுத்த கட்டமாக போராட்டங்கள் தீவிர படுத்தப்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.இந்த போராட்டத்தில் 100-க்கும் மேற்பட்ட பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# குருவிகுளம் புனித சூசையப்பர் ஆலய கொடியேற்று திருவிழா



**சங்கரன்கோவில், மே.4-**
குருவிகுளம் புனித சூசையப்பர் ஆலய கொடியேற்றத் திருவிழா கோலாகலமாக தொடங்கியது.

திருப்பலிக்கு பாளையங்கோட்டை மறை மாவட்ட அருட் தந்தை ஸ்டீபன் மற்றும் பங்கு தந்தை சந்தியாகு ஆகியோர் தலைமை வைத்து துவக்கி வைத்தனர் .

திருவிழா ஏற்பாட்டில் பங்கு ஆலய குழுவினர் தலைவர் அல்போன்ஸ், செயலாளர் சின்னப்பராஜ் , பொருளாளர் லூயிஸ் சுந்தர்ராஜன் மற்றும் உறுப்பினர்கள் பங்கு பொறுப்பாளர்கள் ஏற்பாடு செய்தனர்.

கொடியேற்ற திருவிழாவில் திருவிழா பொறுப்பாளர்கள், அருள் சகோதரிகள் மற்றும் அனைத்து இறைமக்களும் திரளாக கலந்து கொண்டனர். திருப்பலி முடிந்தவுடன் அனைவருக்கும் அசன உணவு வழங்கப்பட்டது. 02 ம்தேதி முதல் 11ம் தேதி வரை 10 நாட்கள் இந்த திருவிழா தொடர்ந்து நடைபெறும். தினமும் விசேஷ திருப்பலிகளும் வழிபாடுகளும் நடைபெற்று வருகிறது. 11ம் தேதி நிறைவு நாள் அன்று பெருநாள் திருப்பலி மற்றும் தேர் திருவிழா நடைபெறும்.

நாட்டுக்கு சுதந்திரம்
கிடைத்தது நமக்கு
பெருமை
நாட்டை சுத்தமாக
வைப்பது நமது கடமை

# நீலகிரியில் மே தினத்தன்று விடுமுறை அளிக்காத 35 நிறுவனங்கள் மீது வழக்கு

**ஊட்டி, மே.04-**
சென்னை தொழிலாளர் ஆணையாளர் ஆணையின்படியும், கோவை, கூடுதல் தொழிலாளர் ஆணையாளர் மற்றும் ஈரோடு தொழிலாளர் இணை ஆணையாளர் அறிவுரையின் படியும், குன்னூர், தொழிலாளர் உதவி ஆணையாளர் (அமலாக்கம்) தாமரை மணாளன் தலைமையில் தொழிலாளர் துறை அலுவலர்கள் நீலகிரி மாவட்டத்தில் குன்னூர், ஊட்டி, கோத்தகிரி மற்றும் கூடலூர் பகுதிகளில் இயங்கும் கடைகள், வணிக நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள் மற்றும் போக்குவரத்து நிறுவனங்கள் ஆகியவற்றில் தொழிலாளர் துறை அலுவலர்களால் கடந்த 1-ந் தேதி மே தினத்தன்று ஆய்வு செய்தனர்.

இதில் நீலகிரி மாவட்டம் முழுவதும் மொத்தம் 52 நிறுவனங்களில் ஆய்வு செய்ததில் மே தினத்தன்று பணிபுரிந்த பணியாளர்களுக்கு இரட்டிப்பு சம்பளமோ அல்லது மாற்று விடுமுறையோ முறையாக வழங்காமல் பணிக்கு அமர்த்திய 35 நிறுவனங்கள் கண்டறியப்பட்டன. 1957ம் ஆண்டு உணவு நிறுவனங்கள் சட்டம் மற்றும் விதிகளின் கீழ் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு,
(நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பேரூராட்சிகளின் இயக்ககம்)
தஞ்சாவூர் மாவட்டம், திருபுவனம் முதல்நிலைப் பேரூராட்சி
செயல் அலுவலர், திருபுவனம் பேரூராட்சி அலுவலகம், திருபுவனம் 612103
E-mail : thirubuvanam.tp@gmail.com

ந.க.எண். 73 / 2025 | மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு | நாள் : 30.04.2025

திருபுவனம் பேரூராட்சியில் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விதிகள் 1998 மற்றும் 2000-ன்படியான கீழ்க்காணும் பணிகளுக்கு இணையதளம் வழியாக ( இணைய தள முகவரி https://tntenders.gov.in ) ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு (ரூ.) இலட்சத்தில் | வைப்புத் தொகை ரூ. | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு நகர்புற சாலை கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் மற்றும் கூடுதல் ஒதுக்கீடு (KNMT) 2025-2026 திருபுவனம் காந்திநகர் 1 வது தெரு முதல் 8வது தெரு தார்சாலை போம்பாடு செய்தல் பணி | ரூ.30.93 இலட்சம் | ரூ. 67,000/- | 4 மாதங்கள் |
| 2 | திருபுவனம் தென்றல்நகர் விரிவாக்கம் தார்சாலை மேம்பாடு செய்தல் பணி | ரூ.36.07 இலட்சம் | | 4 மாதங்கள் |
| | கூடுதல் | ரூ. 67.00 இலட்சம் | | |

ஒப்பந்தப்புள்ளிகள் 20.05.2025 மாலை 3.00 மணி வரை மின்னணு ஒப்பந்தப்புள்ளி வழியாக பெறப்படும். மேலும் விபரங்கள் https://tntenders.gov.in என்ற இணையதளமுகவரி வழியாகவும், அலுவலக நேரத்தில் நேரிலும் பெற்றுக் கொள்ளலாம்.

செயல் அலுவலர்,
திருபுவனம் முதல்நிலைப் பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம்.

பேரூராட்சி மன்றத் தலைவர்,
திருபுவனம் முதல்நிலைப் பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம்.

செ.ம.தொ.இ./ 1833/ ஒப்பந்தப்புள்ளி / 2025

தென்காசி மாவட்டம்,
சுரண்டை நகராட்சி
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.எண்.1094/2025/இ1 நாள்:02.05.2025

தென்காசி மாவட்டம் சுரண்டை நகராட்சி கனிமம் மற்றும் சுரங்கம் திட்டம் 2024–25ன் கீழ் ரூ.58.18 இலட்சம் மதிப்பீட்டில் சுரண்டை நகராட்சி வார்டு எண்: 12 இலந்தைகுளம் சாலையில் தார் சாலை அமைத்தல் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.

2.ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள்:
அ) ஒப்பந்தப்புள்ளி விபர முன் கூட்டம் – 12.05.2025 முற்பகல் 11.00 மணிக்கு
ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் – 19.05.2025 மாலை 3.00 மணி வரை
இ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல் – 19.05.2025 மாலை 3.30 மணி

3. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.

4. ஒப்பந்தப்புள்ளியின் கால நீட்டிப்பு குறித்த அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி இரத்து செய்யப்பட்டது உள்ளிட்ட விபரங்களை மேற்படி இணையதள முகவரியான https://tntenders.gov.in ல் அறிந்து கொள்ளலாம்.

ஆணையாளர்
சுரண்டை நகராட்சி

செ.வெ.ஆ.எண்.62/2025/செ.ம.தொ.அ/தென்காசி/நாள்:03.05.2025

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

## இந்தளவுக்கு வளரும் என்று நினைக்கவில்லை:

# ஐ.பி.எல். குறித்து கோலி வியப்பு



பெங்களூரு, மே 04-

ஐ.பி.எல். தொடரின் வளர்ச்சி குறித்து ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு வீரர் விராட் கோலி பேசியுள்ளார்.

**18-வது சீசன்...**

ஐ.பி.எல். தொடர் கடந்த 2008 ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்டு, இதுவரை 17 சீசன்கள் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. ஐ.பி.எல். தொடரின் 18-வது சீசன் விறுவிறுப்பாக சென்று கொண்டிருக்கிறது. இந்த நிலையில், ஐ.பி.எல். தொடரின் அறிமுகம் குறித்து ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி வீரர் விராட் கோலி மனம் திறந்துள்ளது முக்கியத்துவம் பெறுகிறது.

**எதிர்பாராத விஷயங்கள்...**

இது தொடர்பாக அவர் பேசியதாவது: ஐ.பி.எல். தொடர் அறிமுகமான ஆண்டு மிகவும் உற்சாகமாக இருந்தது. நிறைய எதிர்பாராத விஷயங்கள் நடந்தன. அப்போது நாங்கள் அதிகம் டி20 போட்டிகளில் விளையாடியிருக்கவில்லை. உலகின் பல்வேறு நாடுகளிலுள்ள கிரிக்கெட் வீரர்களுடன் இணைந்து விளையாடும் வாய்ப்பு கிடைத்தது.

**உணர்ச்சிகரமான தருணமாக...**

ஐ.பி.எல். ஏலம் நடைபெற்றபோது, நாங்கள் மலேசியாவில் இருந்தோம். நாங்கள் முதல் தர கிரிக்கெட்டர்கள் வரிசையில் ரூ.20 லட்சத்துக்கான ஏலத்தில் இடம் பெற்றோம். எங்களுக்கு 20 லட்சம் கிடைத்ததை நினைத்து மகிழ்ச்சியாக இருந்தோம். மிகவும் உணர்ச்சிகரமான தருணமாக அது இருந்தது. ஏனெனில், கோலாகலமான தொடக்க விழா, மிகப் பெரிய கிரிக்கெட் வீரர்களுடன் சந்திப்பு என மகிழ்ச்சியின் உச்சத்தில் இருந்தோம்.

**நீண்ட பயணம்...**

ஐ.பி.எல். பயணம் மிகவும் நீண்ட பயணமாக இருந்துள்ளது. நாங்கள் இளம் வீரர்களாக ஐ.பி.எல். தொடரில் இணைந்தோம். சிறந்த கிரிக்கெட் வீரர்களுடன் இணைந்து விளையாடினோம். இளம் வீரர்களாக அறிமுகமான நாங்கள் அனுபவம் வாய்ந்த வீரர்களாக வளர்ந்தோம்.

**நினைக்கவில்லை...**

நேர்மையாக கூறவேண்டுமென்றால், ஐ.பி.எல். தொடர் அறிமுகப்படுத்தப்பட்டபோது, இந்த அளவுக்கு ஐ.பி.எல். வளர்ச்சியடையும் என ஒருபோதும் நினைக்கவில்லை. ஆனால், ஐ.பி.எல். தொடரின் 18-வது சீசனில் இருக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் உற்சாகம் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

ஐ.பி.எல். தொடருக்கான ஏற்பாடுகள், நடத்தப்படும் விதம், அணிகளுக்கு இடையேயான கடும் போட்டி இந்த தொடரை மிகவும் விரும்பத்தக்கதாக மாற்றியுள்ளது என்றார்.

# கோலிக்கு தாக்கத்தை ஏற்படுத்திய வீரர்



நடப்பு ஐ.பி.எல். தொடரில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியில் விளையாடி வரும் முன்னாள் கேப்டன் விராட் கோலி நடப்பு சீசனில் 10 போட்டிகளில் 6 அரை சதம் உள்பட 443 ரன்கள் குவித்து அதிக ரன் குவித்தவர்கள் பட்டியலில் 4-வது இடத்தில் இருக்கிறார். இந்நிலையில், ஆர்.சி.பி.யின் அதிகாரப்பூர்வ எக்ஸ் வலைதளத்தில் விராட் கோலி பங்கேற்ற பாட்காஸ்ட் நிகழ்ச்சியின் டிரெய்லர் ஷேர் செய்யப்பட்டிருக்கிறது.

அந்த டிரெய்லரில் விராட் கோலி பேசியதாவது: ஆரம்பத்தில் நான் விளையாடிய அனைத்து வீரர்களிலும், மார்க் பவுச்சர் என்னுள் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தினார். எனது பலவீனங்கள் என்னவாக இருக்கும் என்பதை அவர் கண்டுபிடித்தார். அடுத்த கட்டத்திற்கு நான் முன்னேற வேண்டும் என்றால், அவரிடம் எதுவும் கேட்காமல் நான் இதைச் செய்யவேண்டும். என்னுடன் நடத்திய உரையாடல்களால் என்னை அவர் மிகவும் திகைக்க வைத்தார். எனக்கு எந்த விதத்திலும் நிலைமை மாறிவிட்டதாக நான் நினைக்கவில்லை. அவர்களுக்கு பரிணமிக்க, அழுத்தத்தைக் கையாள, உலகின் பல்வேறு பகுதிகளில் விளையாட, உலகக் கோப்பை வரும்போது அவர்கள் தயாராக இருப்பதாக உணரும் அளவுக்கு போதுமான ஆட்டங்களை விளையாட 2 வருட சுழற்சி தேவை. இதைப் புரிந்து கொண்டே டி20 போட்டிகளை விட்டு வெளியேறும் முடிவு எடுக்கப்பட்டது என தெரிவித்தார்.

# நடுவர்களுடன் வாக்குவாதம் ஏன்? ஷுப்மன் கில் விளக்கம்



அகமதாபாத், மே 04-

சன்ரைசர்ஸுக்கு எதிரான போட்டியில் நடுவருடன் ஷுப்மன் கில் வாக்குவாதம் செய்தது சமூக வலைதளங்களில் பேசுபொருளாகியுள்ளது.

**வாக்குவாதம்...**

அகமதாபாத் மைதானத்தில் நடந்த (மே.2) போட்டியில் முதலில் குஜராத் 20 ஓவர்களில் 224/6 ரன்கள் எடுக்க, ஹைதராபாத் 20 ஓவர்களில் இழந்து 186/6 ரன்களே சேர்த்தது.

இந்த வெற்றியின் மூலம் குஜராத் பிளே ஆப் பந்தயத்தில் நிலைக்க, ஹைதராபாத் அந்த வாய்ப்பை இழந்து வெளியேறியது. இந்தப் போட்டியில் ஷுப்மன் கில் நடுவர்களுடன் வாக்குவாதம் செய்தது சமூக வலைதளத்தில் பேசுபொருளாகியுள்ளது.

**அதிருப்தி...**

முதலில் குஜராத் பேட்டிங்கின்போது ஷுப்மன் கில் ரன் அவுட் என 3-ஆம் நடுவர் கூறியது சர்ச்சையானது. பின்னர், பந்துவீச்சில் 13.4ஆவது ஓவரில் பிரசித் கிருஷ்ணா வீசிய பந்துக்கு எல்பிடபில்யூ கொடுக்கப்படவில்லை என குஜராத் சார்பில் ரிவிவ் எடுக்கப்பட்டது. இம்பாக்ட் அம்பயர்ஸ் காலில் இருந்ததால் நாட் அவுட் எனக் கொடுக்கப்பட்டது. இதனால் குஜராத் அணியின் கேப்டன் ஷுப்மன் கில் களத்தில் இருந்த நடுவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். ஒரே நாளில் இரண்டுமுறை இப்படியானதுக்கு ஷுப்மன் கில் மீது பலரும் அதிருப்தி தெரிவித்துள்ளார்கள்.

**உணர்ச்சி மிகுதியால்...**

இது குறித்து போட்டிக்குப் பின்னர் ஷுப்மன் கில், "எனக்கும் நடுவர்களும் சில உரையாடல்கள் இருந்தன. சில நேரங்களில் நீங்கள் 110 சதவிகித உழைப்பினைக் கொடுக்கும்போது உணர்ச்சிகள் மிகுதியால் இப்படி நடக்கும்" என்றார்.

புள்ளிப் பட்டியலில் குஜராத் அணி 2-ஆம் இடத்தில் இருக்கிறது. மும்பை இந்தியன்ஸ் அணி தற்போதைக்கு முதலிடத்தில் நீடிக்கிறது.

## புள்ளிகள் பட்டியல்

| வரிசை | அணிகள் | ஆட்டங்கள் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் | நெட் ரன்ரேட் |
|---|---|---|---|---|---|---|
| 1 | மும்பை | 11 | 7 | 4 | 14 | +1.274 |
| 2 | குஜராத் | 10 | 7 | 3 | 14 | +0.867 |
| 3 | பெங்களூரு | 10 | 7 | 3 | 14 | +0.521 |
| 4 | பஞ்சாப் | 10 | 6 | 1 | 13 | +0.199 |
| 5 | டெல்லி | 10 | 6 | 4 | 12 | +0.362 |
| 6 | லக்னோ | 10 | 5 | 5 | 10 | -0.325 |
| 7 | கொல்கத்தா | 10 | 4 | 5 | 9 | +0.271 |
| 8 | ராஜஸ்தான் | 11 | 3 | 8 | 6 | -0.780 |
| 9 | ஐதராபாத் | 10 | 3 | 7 | 6 | -1.192 |
| 10 | சென்னை | 10 | 2 | 8 | 4 | -1.211 |

## இன்றைய ஐ.பி.எல் (53, 54- வது லீக்)



அணிகள் - கொல்கத்தா vs ராஜஸ்தான்
இடம் - கொல்கத்தா மணி - மதியம் 3.30
அணிகள் - பஞ்சாப் vs லக்னோ
இடம் - தர்மசாலா மணி - இரவு 7.30

# பஹல்காம் தாக்குதல் எதிரொலி: ஆசிய கோப்பை ரத்தாக வாய்ப்பு..?




புதுடெல்லி, மே 04-

பஹல்காம் தாக்குதல் எதிரொலியாக இந்தியா - வங்காளதேசம் தொடர், ஆசிய கோப்பை தொடர் ரத்தாக வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

**போர்ப் பதற்றம்...**

ஜம்மு காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் கடந்த 22-ம் தேதி பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய இந்த காட்டுமிராண்டித்தனமான செயலுக்கு விளையாட்டு பிரபலங்களும் கடும் கண்டனம் தெரிவித்தனர். இந்த தாக்குதலையடுத்து இந்தியா - பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் நிலவி வருகிறது.

**பெரும் சர்ச்சை...**

இதனிடையே வங்காளதேசத்தில் செயல்பட்டு வரும் இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் முகம்மது யூனுஸுக்கு நெருக்கமானவரும் வங்கதேச ராணுவ ரைபிள்ஸ் படையின் முன்னாள் தலைவருமான ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஏ.எல்.எம். பஸ்லுர் ரஹ்மான், பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மீது இந்தியா தாக்குதல் நடத்தினால், இந்தியாவின் 7 வடகிழக்கு மாநிலங்களையும் வங்காளதேசம் ஆக்கிரமிக்க வேண்டும் என்று முகமது யூனுஸுக்கு அவர் பரிந்துரைத்துள்ளார். இந்தியா -வங்காளதேசம் இடையேயான உறவில் சமீபகாலமாக கசப்புணர்வு அதிகரித்துவரும் நிலையில், முன்னாள் ராணுவ தலைவரின் இந்த கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தும் விதமாக உள்ளது.

**ரத்தாக வாய்ப்பு?**

இதனிடையே இந்திய கிரிக்கெட் அணி ஆகஸ்ட் மாதத்தில் வங்காளதேசத்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 3 டி20 போட்டிகளில் விளையாட உள்ளது. இந்நிலையில் ஏ.எல்.எம். பஸ்லுர் ரஹ்மானின் சர்ச்சைக்குரிய கருத்தால் இந்த தொடரை ரத்து செய்ய பி.சி.சி.ஐ. முடிவெடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதேபோல் இந்த ஆண்டு நடைபெற உள்ள ஆசிய கோப்பை தொடரிலும் இந்தியாவின் பங்கேற்பு நிச்சயமற்றதாகவே உள்ளது. இந்திய அணி பாகிஸ்தானுக்கு எதிராக விளையாடாது என்பதால் ஆசிய கோப்பை தொடர் திட்டமிட்ட படி நடைபெறுமா? என்பது சந்தேகமாகவே உள்ளது.

# ஜோஸ் பட்லர் புதிய சாதனை



நடப்பு ஐ.பி.எல். தொடரின் குஜராத் மாநிலத்தின் அகமதாபாத்தில் நடைபெற்ற போட்டியில் குஜராத் டைட்டன் - ஐதராபாத் அணிகள் விளையாடின. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற ஐதராபாத் அணியின் கேப்டன் பேட் கம்மின்ஸ் முதலில் பந்துவீச்சைத் தேர்ந்தெடுத்தார். அதன்படி, முதலில் பேட்டிங் செய்த குஜராத் அணி 20 ஓவர்களில் ரன்கள் 224 எடுத்தது. சிறப்பாக விளையாடிய கேப்டன் ஷுப்மன் கில் 76 ரன்களும், விக்கெட் கீப்பர் ஜோஸ் பட்லர் 64 ரன்களும் (37 பந்துகளில், 4 சிக்ஸர், 3 பவுண்டரி) எடுத்தனர்.

இந்தப் போட்டியில் ஜோஸ் பட்லர் 12 ரன்கள் எடுத்தபோது, தனது டி20 வாழ்க்கையில் மற்றொரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளார். ஐ.பி.எல்.லில் 4,000 ரன்களை நிறைவு செய்த முதல் இங்கிலாந்து பேட்ஸ்மேன் என்ற சிறப்பை பெற்றுள்ளார்.

மேலும், 4,000 ரன்கள் மைல்கல்லை எட்டிய மூன்றாவது வேகமான பேட்ஸ்மேனாக என்ற சிறப்பையும் பட்லர் பெற்றுள்ளார். ஐ.பி.எல்.லில் 116 இன்னிங்ஸ்களில் விளையாடியுள்ள பட்லர், 4,000 ரன்களுக்கு மேல் குவித்துள்ளார். அதில், 7 சதங்கள் மற்றும் 23 அரைசதங்களும் அடங்கும்.

# பிரதமர் மோடியுடன் ஓமர் அப்துல்லா சந்திப்பு

புதுடில்லி, மே 04-

டில்லியில் பிரதமர் மோடியை ஜம்மு - காஷ்மீர் முதல்வர் ஓமர் அப்துல்லா சனிக்கிழமை சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது பஹல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதல் உட்பட பல்வேறு பிரச்னைகள் குறித்து இருவரும் விவாதித்துள்ளனர். பிரதமரின் இல்லத்தில் நடந்த இந்த சந்திப்பு சுமார் 30 நிமிடங்கள் நீடித்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு இரு தலைவர்களுக்கும் இடையிலான முதல் சந்திப்பு இதுவாகும். ஜம்மு - காஷ்மீரின் சுற்றுலா நகரமான, அனந்த்நாக் மாவட்டத்திற்குட்பட்ட பஹல்காமின் பைசாரன் பள்ளத்தாக்குப் பகுதியில் கடந்த ஏப். 22ஆம் தேதி சுற்றுலா பயணிகள் மீது பயங்கரவாதிகள் சரமாரியாகத் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்த தாக்குதலையடுத்து பாகிஸ்தான் மீது இந்தியா பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

## பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடி:

# பாக்.கின் இறக்குமதிகளுக்கு மத்திய அரசு அதிரடி தடை

புதுடெல்லி, மே 04-

பாகிஸ்தானில் இருந்து நேரடியாக அல்லது மறைமுகமாக என அனைத்துவித இறக்குமதிகளுக்கும் இந்தியா உடனடி தடைவிதித்துள்ளதாக வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வர்த்தகத்துறை அமைச்சகம் வெளியிட்டிருக்கும் அறிவிப்பின் படி, "மறுஉத்தரவு வரும் வரை பாகிஸ்தானில் உற்பத்தியாகும் பொருட்கள் அல்லது அங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு உடனடியாக அமலாகும் வகையில் தடைவிதிக்க ஏதுவாக வெளிநாட்டு வர்த்தக கொள்கையில் புதிய திருத்தம் செய்யப்பட்டுள்ளது. நாட்டின் பாதுகாப்பு மற்றும் பொதுநலனை கருத்தில் கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், கப்பல் போக்குவரத்து இயக்குநரகம் பிறப்பித்துள்ள மற்றொரு உத்தரவில் பாகிஸ்தான் கொடியை தாங்கிய எந்தவொரு கப்பலும் இந்திய துறைமுகங்களுக்குள் அனுமதிக்கப்படாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த உத்தரவில், "இந்திய சொத்துக்கள், சரக்கு மற்றும் உள்கட்டமைப்பை பாதுகாக்கும் வகையில், வணிகக் கப்பல் சட்டம் 1958, பிரிவு 411-ன் கீழ் உடனடியாக அமலுக்கு வரும்படி இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில், பல்கலைக்கழகங்கள், சுயநிதி பொறியியல் கல்லூரிகள் கூட்டமைப்பு, தனியார் கலைக் கல்லூரிகள் கூட்டமைப்பு, அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளின் சார்பில் மாநில சுயாட்சி நாயகருக்கு (முதல்வர் மு.க.ஸ்டாலின்) நடந்த பாராட்டு விழாவில், அவர் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார். அருகில் அமைச்சர்கள் உள்ளனர்.

## கவர்னருக்கும், ஜனாதிபதிக்கும் சுப்ரீம் கோர்ட்

# காலக்கெடு நிர்ணயம் செய்தது மிகப்பெரிய வெற்றியாகும்

## தனக்கு நடந்த பாராட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, மே 04-

எந்த காலத்திலும் மாநில உரிமையை விட்டுக்கொடுக்க மாட்டோம் என்று தெரிவித்த முதல்வர் மு.க.ஸ்டாலின், கவர்னருக்கும், ஜனாதிபதிக்கும் காலக்கெடு நிர்ணயம் செய்தது மிகப்பெரிய வெற்றி என்றும் அவர் பேசினார்.

கவர்னருக்கு எதிரான நீதிமன்ற வழக்கில் சாதகமான தீர்ப்பைப் பெற்ற முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கல்வி நிறுவனங்கள் சார்பில் சென்னையில் பாராட்டு விழா நேற்று நடைபெற்றது. ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டரங்கில் மாலை 4 மணிக்கு கலைநிகழ்ச்சிகளுடன் விழா தொடங்கியது. விழாவுக்கு திராவிடர் கழகத் தலைவரும், பெரியார் மணியம்மை பல்கலைக்கழக வேந்தருமான கி.வீரமணி தலைமை வகித்தார். உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் முன்னிலை வகித்தார்.

இந்த நிகழ்ச்சியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் பேசியதாவது:-சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் தீர்ப்பு மூலம் பூனைக்கு மணி கட்டியுள்ளனர். கவர்னருக்கும், ஜனாதிபதிக்கும் காலக்கெடு நிர்ணயம் செய்தது மிகப்பெரிய வெற்றி. ஒரு கல்லில் பல மாங்காய்களை அடித்துள்ளோம். பிரதமரின் உரிமையை ஜனாதிபதி எடுத்துக் கொண்டால் தாங்கி கொள்வாரா? எந்த காலத்திலும் உரிமையை விட்டுத்தர மாட்டோம்.

தீர்ப்பு தந்த நம்பிக்கையோடு மாநில சுயாட்சியை மீடெடுக்க ஒரு குழுவை அமைத்துள்ளோம். இந்தியாவுக்கு இன்றைக்கு நான் முன்மாதிரியாக இருப்போம். இன்னும் கடுமையாக உழைக்க வேண்டும் என்ற எண்ணம் தான் எனக்கு ஏற்பட்டுள்ளது. தி.மு.க.விற்கு வாக்களித்த மக்கள்தான் சுயாட்சி நாயகர்கள். பாராட்டு விழா என்று யாராவது கேட்டால் நான் நேரம் அளிக்க மாட்டேன். சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு தமிழ்நாடு மக்களுக்கு கிடைத்த வெற்றி என்பதால் பாராட்டு விழாவிற்கு நேரம் ஒதுக்கினேன். மத்திய அரசின் ஏஜெண்டாக உள்ள கவர்னர் திட்டங்களை தடுக்க முடியும் என்றால் மக்கள் போடும் ஓட்டுக்கு என்ன மரியாதை? கவர்னர் பதவி என்பது எந்த பயனும் இல்லத ரப்பர் ஸ்டாம்ப் போன்றது. இவ்வாறு அவர் பேசினார்.

# மக்களை சந்திக்ககூடிய அளவுக்கு என்ன திட்டம் கொண்டு வந்தீர்கள்

## எடப்பாடி பழனிசாமி கேள்வி




சென்னை, மே 04-

மக்களை சந்திக்ககூடிய அளவுக்கு என்ன திட்டம் கொண்டு வந்துள்ளீர்கள் என்று எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேசியதாவது:- 2026 குடும்ப ஆட்சி, வாரிசு அரசியல், மன்னர் ஆட்சிக்கு முடிவு கட்டும் தேர்தல். இந்த ஆட்சி எப்போது முடிவுக்கு வரும் என்று மக்கள் காத்துக் கொண்டு இருக்கிறார்கள். தி.மு.க.விற்கு கொள்கை கிடையாது. மக்களை சந்திக்ககூடிய அளவுக்கு என்ன திட்டம் கொண்டு வந்துள்ளீர்கள். அ.தி.மு.க. அட்சியில் திட்டங்கள் ஊர்ந்து போனதாக முதல்வர் கூறுகிறார். சொத்து வரி, குடிநீர் வரி என அனைத்தையும் தி.மு.க. உயர்த்தியுள்ளது என்றார்.

மேலும் பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்தது தொடர்பாக பேசிய எடப்பாடி பழனிசாமி, இது என்னுடைய கட்சி உங்களுக்கு ஏன் கோபம் வருகிறது. இரு கட்சிகளும் மகிழ்ச்சியோடு அமைத்த கூட்டணி. எங்களுக்கு மடியில் கனமில்லை. வழியில் பயம். வருமான வரித்துறை அமலாக்கத்துறையை பார்த்து தி.மு.க.விற்கு பயம் வந்து விட்டது என்று விமர்சித்தார்.

# ஆஸி., தேர்தலில் ஆளும் கட்சி வெற்றி: அல்பனீஸ்-க்கு பிரதமர் மோடி வாழ்த்து

மெல்போர்ன், மே 04-

ஆஸ்திரேலியா தேர்தலில் ஆளும் தொழிலாளர் கட்சி வெற்றி பெற்றது. அந்தோணி அல்பனீஸ் மீண்டும் பிரதமர் ஆகிறார். அவருக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் பிரதமர் அந்தோணி அல்பானீஸ் தலைமையிலான தொழிலாளர் கட்சி ஆட்சி செய்து வருகிறது. இதற்கிடையே ஆஸ்திரேலியாவில் 150 தொகுதிகளை கொண்ட பாராளுமன்றத்துக்கு நேற்று தேர்தல் நடந்தது.

இதில் 76 தொகுதிகளை கைப்பற்றும் கட்சி ஆட்சியமைக்கும். இந்த தேர்தலில் அல்பானீஸ் தலைமையிலான தொழிலாளர் கட்சிக்கும், பீட்டர் டட்டன் தலைமையிலான லிபரல் நேஷனல் கூட்டணிக்கும் இடையே கடும் போட்டி நிலவியது.

இந்நிலையில் பதிவான வாக்குகள் நேற்றே எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அதன்படி, ஆஸ்திரேலிய பாடாளுமன்ற தேர்தலில் ஆளும் தொழிலாளர் கட்சி அதிக இடங்களை கைப்பற்றியுள்ளது. இதன் மூலம் அந்தோணி அல்பனீஸ் மீண்டும் ஆஸ்திரேலியா பிரதமர் ஆகிறார். அவர் 2வது முறையாக ஆஸ்திரேலிய பிரதம் ஆகிறார்.

இந்நிலையில், ஆஸ்திரேலிய பிரதமராக 2வது முறையாக தேர்வாகியுள்ள அந்தோணி அல்பனீசுக்கு இந்திய பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில், இந்த வெற்றி ஆஸ்திரேலிய மக்கள் உங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையை காட்டுகிறது. இந்தோ-பசுபிக் பகுதியில் அமைதி, நிலைத்தன்மை, வளர்ச்சியை கொண்டு செல்ல இந்தியா- ஆஸ்திரேலியா நட்பை மேலும் வலுப்படுத்த உங்களுடன் இணைந்து பணியாற்ற தயாராக உள்ளேன்' என தெரிவித்துள்ளார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# ஸ்ரீராமபுரம் வித்விதா அகடாமி பள்ளி ஆண்டு விழா: மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார் அமைச்சர்



**ஒட்டன்சத்திரம், மே 04-**
திண்டுக்கல் மாவட்டம் ஸ்ரீராமபுரம் வித்விதா அகடாமி பள்ளியின் மூன்றாம் ஆண்டு விழா நடைபெற்றது.

இந்த விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ஆர். சச்சிதானந்தம், பெரம்பலூர் பாரத் கல்வியின் நிறுவனங்களின் நிறுவனத் தலைவர் ஜே. கார்த்தி ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பல்வேறு போட்டிகள், கல்வி, உள்ளிட்ட இதர பிரிவுகளில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு கோப்பைகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார்கள். விழாவில் பள்ளி மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. ஆண்டு விழாவிற்கான ஏற்பாடுகளை பள்ளியின் நிறுவன தலைவர் சாமிநாதன், தாளாளர் சித்தார்த்தன், செயலாளர் கௌதமன்,பள்ளி அறங்காவலர்கள் சுகன்யா, ராதிகா, பள்ளி முதல்வர் நர்மதாஸ்ரீ,உள்ளிட்ட ஆசிரியர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் செய்திருந்தனர். படம். திண்டுக்கல் மாவட்டம் ஸ்ரீ.ராமபுரம் வித்விதா பள்ளி மூன்றாம் ஆண்டு விழாவில் அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ஆர். சச்சிதானந்தம்ஆகியோர் மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கினர்கள்.

# கீழையூரில் நடந்த சட்ட விழிப்புணர்வு முகாம்: பொதுமக்களுக்கு நீதிபதி ஆலோசனை



**மேலூர், மே 04-**
மேலூர் வட்ட சட்டப்பணிகள் குழு சார்பில் சட்ட விழிப்புணர்வு முகாம் கீழையூர் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

மேலூர் வட்ட சட்டப்பணிகள் குழு தலைவரும், மேலூர் சார்பு நீதிமன்ற நீதிபதியுமான எம். சாமுண்டீஸ்வரி பிரபா பொதுமக்களுக்கு சட்டப் பணிகள் விழிப்புணர்வு குறித்து பேசினார்.

நீதிமன்றத்தில் இருந்து குற்ற வழக்கு அல்லது பிரச்சினை உங்கள் மீது வரும் போது அதனை எப்படி கையாளுவது அதற்கு தான் இந்த சட்ட விழிப்புணர்வு முகாம் பற்றி பொதுமக்களுக்கு அறிவுரைகளை வழங்க வந்திருக்கிறோம். இன்று நீதிமன்றத்தில் சராசரியாக நாள் ஒன்றுக்கு இரண்டு விவாகரத்து வழக்குகளுக்கு மேல் வருகிறது. அந்த காலத்தில் நாம் கூட்டுக் குடும்பமாக வசித்து வந்தோம் இன்று தனிக்குடித்தனமாக சென்று வசித்து வருவதால் கணவன் மனைவி இருவருக்கும் அடிக்கடி கருத்து வேறுபாடு ஏற்பட்டு தகராறு ஏற்படுகிறது. முடிந்த அளவு பெரியவர்களிடம் முறையிட்டு தீர்வு கண்டோம். ஆனால் இன்று காவல் நிலையம்போகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. முடிந்த அளவு குடும்பத்தில் சமாதானமாக பேசிவாழ்ந்தால் நல்லது. அதற்கு எங்களது வட்ட சட்டப் பணிகளின் குழு உள்ளது. இவ்வாறு நீதிபதி சாமுண்டீஸ்வரி பொதுமக்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் வழக்கறிஞர்கள் எஸ்.ஜோதிமணி, துரைப் பாண்டியன், அரசு வழக்கறிஞர் சபாபதி, மேலூர் வழக்கறிஞர் சங்க தலைவர் திருமேனி, செயலாளர் சுரேந்திரன், அனைத்து வழக்கறிஞர்கள், மேலூர் வட்டாட்சியர் செந்தாமரை, மற்றும் கீழையூர் ஊராட்சி செயலாளர் கணேஷ் மணிகண்டன் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## ராமநாதபுரம் மாவட்டத்தில் கோடைவிடுமுறை:

# மாணவ-மாணவிகளுக்கு கலை பயிற்சி

**ராமநாதபுரம்,மே 04-**
கோடை விடுமுறையை பயனுள்ள வகையில் கழிக்கும் வகையில் ராமநாதபுரம் மாணவ மாணவிகளுக்கு கலை பயிற்சி வழங்கப்படுகிறது.

கலை பண்பாட்டுத்துறை ஜவகர் சிறுவர் மன்றங்கள் வாயிலாக ஆறு முதல் பதினாறு வயதுக்கு உட்பட்ட பள்ளிக் கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு கலைப்பயிற்சிகள் வழங்குதல், அவர்களின் கலைத்திறமைகளை வெளிக்கொணர்தல், கலைக் கல்வி வழங்குதல் ஆகியவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வருகின்றன.

மதுரை மண்டலத்தின் கீழ் செயல்படும் ராமநாதபுரம் மாவட்ட ஜவகர் சிறுவர் மன்றத்தில் பாட்டு, பரதநாட்டியம், சிலம்பம், மற்றும் ஓவியம் ஆகிய கலைகளில் 6 வயது முதல் 16 வயது வரை உள்ள மாணவர்களுக்கு சனிக்கிழமை மாலை 04.00 மணி முதல் 06.00 மணி வரையிலும் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரையிலும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், விவரங்களுக்கு 9842567308 என்ற அலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

மாணவர்கள் கோடை விடுமுறையை பயனுள்ளதாக, கழிக்கும் வகையில் மாணவர்களின் கலைத்திறனை வளர்க்கும் விதமாக ராமநாதபுரம் வெளிப்பட்டிணம், முத்தாலம்மன் கோவில் அருகில் அமைந்துள்ள டி.டி.விநாயகர் தொடக்கப்பள்ளியில் வருகிற 06-05-2025 முதல் 25-05-2025 வரை காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை பாட்டு, பரதநாட்டியம், சிலம்பம், மற்றும் ஓவியம் ஆகிய கலைகளில் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

பயிற்சி முடிந்தவுடன் நிறைவு நாள் அன்று பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்படும் எனவும் இவ் வாய்ப்பினை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த தகவலை ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தெரிவித்துள்ளார்.

# நத்தம் அருகே புரவி எடுப்பு திருவிழா



**நத்தம், மே 04-**
திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே உலுப்பகுடியில் வல்லடியார் சுவாமி, முன்னோடி கருப்பு, அரண்மணை கருப்பு மற்றும் கன்னிமார் சுவாமிகளின் புரவி எடுப்பு திருவிழா நடந்தது. இதையொட்டி நேற்று முன்தினம் மாலை ஊர் மந்தையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட சுவாமி சிலைகள் கண் திறக்கப்பட்டு சிறப்பு அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது. தொடர்ந்து நேற்று மாலை வல்லடியார் சுவாமி,

முன்னோடி கருப்பு, அரண்மணை கருப்பு மற்றும் கன்னிமார், மதிலை சிலைகள் வர்ணக் குடைகளுடன் ஊர்வலமாக இருப்பிடம் போய் சேர்ந்தது. இதில் சுற்று வட்டாரங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். திருவிழாவிற்கான ஏற்பாடுகளை உலுப்பகுடி ஊர் கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.

# திருமலைக்கேணியில் சஷ்டி பூஜை



**நத்தம், மே 04-**
திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே திருமலைக்கேணி சுப்பிரமணிய சுவாமி கோவிலில் சித்திரை மாத சஷ்டி பூஜை விழா நடந்தது.

இதையொட்டி முருக பெருமானுக்கு பால்,பழம், பன்னீர், விபூதி,சந்தனம், புஷ்பம் உள்ளிட்ட 16 வகையான அபிஷேகங்களும், சிறப்பு அலங்காரமும், தீபாராதனைகளும் நடந்தது.மேலும் அருகிலுள்ள காமாட்சி மவுனகுரு சாமி மடத்திலும் சிறப்பு பூஜைகள் நடந்தது.

இதில் சுற்றுவட்டாரங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். இதைபோலவே நத்தம் கோவில்பட்டி கைலாசநாதர் கோவில் உள்பிரகாரத்தில் அமைந்துள்ள தண்டபாணி சன்னதியிலும், குட்டூர் உண்ணாமுலை அம்பாள் கோவிலில் உள்ள முருகப்பெருமான் சன்னதியிலும் சஷ்டியையொட்டி சிறப்பு பூஜைகள் நடந்தது.இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டனர்.



**சாயல்குடி பங்களாமேட்டில் உள்ள ஸ்ரீசெல்வ விநாயகர் கோவிலுக்கு சங்கடகரசதுர்த்தி தின சிறப்பு அபிஷேகம், தீபாராதனை, சிறப்பு அலங்காரம், பூஜைகள் நடந்தன. பக்தர்கள் பங்கேற்று செல்வ விநாயகரின் அருள் பெற்றனர். அன்னதானமும் வழங்கப்பட்டன.**

# பெரிய கோட்டையில் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்



**ஒட்டன்சத்திரம். மே 04-**
திண்டுக்கல்மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டத்திற்குட்பட்ட பெரியகோட்டையில் மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் பா. சஞ்ஜய் உள்ளிட்ட நான்காம் ஆண்டு மாணவர்கள் கிராமப்புர அனுபவத் திட்டத்தின் கீழ் தழைக்கூளம் போடுவது தாவரங்களைச் சுற்றியுள்ள மண்ணை கரிம அல்லது கனிமப் பொருட்களால் மூடுவதை உள்ளடக்குகிறது. இதில் இரண்டு முக்கிய வகைகள் உள்ளன. கரிம (வைக்கோல்), இலைகள் அல்லது மரச் சில்லுகள் போன்றவை) மற்றும் கனிம (பிளாஸ்டிக் தாள் அல்லது சரளை போன்றவை) பற்றியும், தழைக்கூளம் போடுவது களைகளை அடக்குதல், மண்ணின் ஈரப்பதத்தைத் தக்கவைத்தல், மண்ணின் வெப்பநிலையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மண் அரிப்பிலிருந்து பாதுகாத்தல் போன்ற நன்மைகளை வழங்குகிறது என்பதையும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார் . படம். திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டத்துக்குட்பட்ட பெரிய கோட்டையில் தலைக்கூளம் பயன்படுத்துவதின் அவசியம் குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

# விஜய்யை பார்க்க சென்ற போலீஸ்காரர் சஸ்பெண்ட்



**மதுரை, மே 04-**
திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் நடக்கும் 'ஜனநாயகன்' படப்பிடிப்பில் நடிகர் விஜய் கலந்துகொள்வதற்காக, சென்னையில் இருந்து அவர் விமானம் மூலம் மதுரை சென்ற நிலையில், விஜய்யை பார்க்க, காலை முதலே அவரது கட்சியினர், ரசிகர்கள் மதுரை விமான நிலைய பகுதியில் திரண்டனர். இந்த சூழலில் விஜய்யை பார்ப்பதற்காக பணி நேரத்தில் அனுமதி கேட்டு சென்ற காவலர், சீருடை இல்லாமல் கட்சிக்கொடி அணிந்துகொண்டு விஜய்யை வரவேற்றுள்ளார். இதுகுறித்த வீடியோ வைரலாகி விமர்சனத்திற்கு உள்ளானது. இந்த வீடியோ ஆணையர் லோகநாதனின் பார்வைக்கு சென்றதை தொடர்ந்து, காவலர் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டுள்ளார். முன்னதாக மதுரை தெப்பக்குளம் குற்றப்பிரிவு காவலராக பணியாற்றிய இவர், விளக்குத்தூண் ஸ்டேஷனில் மாற்றுப்பணியில் இருந்தார். கடந்த 3 தினங்களுக்கு முன்பு மதியம் மீனாட்சி அம்மன் கோவில் பகுதியில் சித்திரைத் திருவிழாவில் அவருக்கு பாதுகாப்பு பணி ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த சூழலில் எமர்ஜென்சி என பர்மிஷன் வாங்கிக்கொண்டு த.வெ.க. தலைவர் விஜய்யை பார்க்கச்சென்றதால் அவர் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

# அருப்புக்கோட்டை தெற்கு ஒன்றிய அ.தி.மு.க. சார்பில் 'பூத் கமிட்டி'



**அருப்புக்கோட்டை, மே 04-**
அருப்புக்கோட்டை தெற்கு ஒன்றிய அண்ணா திமுக பூத்துமிட்டி அமைத்து அதன் படிவங்களை ஒன்றிய செயலாளர் யோக வாசுதேவன் தலைமையிடம் ஒப்படைத்தார்.

விருதுநகர் கிழக்கு மாவட்டம் அருப்புக்கோட்டை சட்டமன்ற தொகுதி பூத் கிளைக் கழக நிர்வாகிகள் அமைக்கும் பணியில் அருப்புக்கோட்டை தெற்கு ஒன்றிய கழகத்தில் இருக்கும் 44 பூத்களை சரிபார்த்து கையேடுகளை விருதுநகர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் ரவிச்சந்திரனிடம் அருப்புக்கோட்டை தெற்கு ஒன்றிய கழக செயலாளர் யோக.வாசுதேவன் ஒப்படைத்தார். நிகழ்ச்சியில் கழக அம்மா பேரவை இணைச் செயலாளர்

ராஜவர்மன், அனைத்துலக எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் சுப்ரமணியன் மாவட்ட அவைத் தலைவர் ஜெயபெருமாள், மாவட்ட இணைச் செயலாளர் இராஜேஸ்வரி வாசுதேவன், காரியாபட்டி மேற்கு ஒன்றிய செயலாளர் தோப்பூர் முருகன்,பூத் மண்டல பொறுப்பாளர்கள் போத்திராஜ்,மாரியப்பன். நாராயணன் பாலசுப்ரமணியம், முத்துகுமரவேல், யோக.அஜய் வாசுதேவன் மற்றும் கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# நத்தத்தில் அ.தி.மு.க. சார்பில் கபடி போட்டி



**நத்தம், மே 04-**
திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் துரைக்கமலம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி அருகில் உள்ள மைதானத்தில் நகர அ.தி.மு.க. சார்பாக முன்னாள் அமைச்சர் நத்தம் விசுவநாதன் பிறந்த நாளை முன்னிட்டு பெண்கள் மற்றும் ஆண்களுக்கான கபடி போட்டிகள் நடந்தது.

இதில் கழக ஜெயலலிதா பேரவை இணை செயலாளர் கண்ணன் தலைமை தாங்கி கபடி போட்டியை தொடங்கி வைத்தார்.

போட்டியில் பல்வேறு மாவட்ட பகுதிகளில் இருந்து 30 -க்கும் மேற்பட்ட அணிகள் பங்கேற்றுள்ளன.

இதில் வெற்றி பெறும் ஆண்கள் அணிகளுக்கு முதல் பரிசாக 50 ஆயிரம் ரூபாயும், 2-ம் பரிசாக 40 ஆயிரமும் 3-ம் பரிசாக 30 ஆயிரமும், நான்காம் பரிசாக 20 ஆயிரம் வழங்கபட உள்ளன. பெண்கள் அணிகளுக்கு முதல் பரிசாக 25 ஆயிரம் ரூபாயும், 2-ம் பரிசாக 20 ஆயிரமும் 3-ம் பரிசாக 15 ஆயிரமும், நான்காம் பரிசாக 10 ஆயிரம் வழங்கபட உள்ளன.

முன்னதாக தொடக்க விழாவில் மாவட்ட ஜெயலலிதா பேரவை இணை செயலாளர் ஜெயபாலன், தெற்கு ஒன்றிய செயலாளர் மணிகண்டன், திண்டுக்கல் மாவட்ட கிரிக்கெட் சங்க செயலாளர் அமர்நாத், நகர அவைத்தலைவர் சேக்ஒலி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கண்ணன், ஆண்டிச்சாமி,

சவரிமுத்து, தகவல் தொழில்நுட்பஅணி மதுரை மண்டல செயலாளர் தினேஷ்குமார் உள்ளிட்ட அ.தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



**திண்டுக்கல் புனித சூசையப்பர் தேவாலயத்தின் 160-ம் ஆண்டு விழாவை முன்னிட்டு சப்பரபவனியை திண்டுக்கல் மதுரை மாவட்ட ஆயர் தாமஸ் பால்சாமி துவக்கி வைத்தார். உடன் கழக பொருளாளரும் திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான திண்டுக்கல் சி.சீனிவாசன், அரசு தலைமை முன்னாள் கொறடா ஆர். மனோகரன், மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் சி.எஸ். ராஜமோகன், மாவட்ட பொருளாளர் எஸ்.ஏ.பழனிவேல், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் பாரதி முருகன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.**

# காந்திக்கிராமம் கிராமிய பல்கலை., பழைய மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி



**திண்டுக்கல், மே 04-**
காந்திக்கிராமம் கிராமிய பல்கலைக் கழகத்தில் பயின்ற பழைய மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

காந்திக்கிராமம் கிராமிய பல்கலைக் கழகத்தில் கடந்த 1992-1995 ஆண்டு கிராமிய தொழில் மேலாண்மை பிரிவில் பயின்ற பழைய மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் பழைய மாணவர் வழக்கறிஞர் மணிராஜ் தலைமை வகித்தார். அருண் குமார் வரவேற்றார்.ஆனந்த், அரவிந்த், கமலி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பல்கலை பதிவாளர் ராதாகிருஷ்ணன், மூத்த பேராசிரியர் சௌந்தர பாண்டியன், இளைஞர் நலத்துறை தலைவர் மணிவேல், மேலாண்மை துறை தலைவர் தமிழ்மணி ஆகியோர் சிறப்புறை ஆற்றினர். முடிவில் தங்கப்பாண்டி நன்றி கூறினார். இவ்விழாவில் முன்னாள் மாணவர்கள் கலைவாணி, புனிதா, ரமேஷ், ஜீவா நாகராஜ், செந்தில் உள்ளிட்ட 34 பேர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் 30 வருடங்களுக்கு முன்பாக கல்லூரியில் பயின்ற பசுமையான நினைவுகள் குறித்து உரையாடியது மிகவும் நெகிழ்ச்சியடைய செய்திருந்தது.



சென்னை மருத்துவக்கல்லூரி சார்பில் நேற்று நடைபெற்ற தேசிய அளவிலான மருத்துவக்கல்வி மாநாட்டினை தொடங்கி வைத்து போட்டியில் வெற்றி பெற்ற மருத்துவ மாணவர்களுக்கு பரிசுகளை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார். முதன்மைச்செயலாளர் ப.செந்தில்குமார், இயக்குநர் அருண்தம்புராஜ், மருத்துவக்கல்வி கூடுதல் இயக்குநர் தேரணிராஜன், செயலாளர் கோபாலகிருஷ்ணன், மருத்துவக்கல்லூரி துணை முதல்வர் கவிதா ஆகியோர் கலந்து கொண்டனர்.



சென்னை எழிலகம் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்கக கூட்டரங்கில் நேற்று அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தலைமையில் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள் மற்றும் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து கள்ளர் சீரமைப்பு இணை இயக்குநர் மற்றும் 38 மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதன்மைச்செயலாளர் சா.விஜயராஜ்குமார், அரசு சிறப்பு செயலாளர் வ.கலையரசி, ஆணையர்கள் சீ.சுரேஷ்குமார், வா.சம்பத் மற்றும் துறை அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நாகபட்டினம், தஞ்சை உள்ளிட்ட

# டெல்டா மாவட்டங்களில் மே 6-ல் மழைக்கு வாய்ப்பு

சென்னை, மே 04-

தமிழகத்தில் இன்று (மே 4) ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும், மே 6-ம் தேதி மயிலாடுதுறை, நாகபட்டினம், தஞ்சாவூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தென்னிந்திய பகுதிகளின் மேல், வளிமண்டல கீழடுக்கு பகுதிகளில், கிழக்கு மற்றும் மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுகிறது.

இதன் காரணமாக இன்று (மே 4ம் தேதி) தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

மே 5ம் தேதி, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கோவை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் மலைப்பகுதிகள், நீலகிரி, தேனி, தென்காசி, விருதுநகர், மதுரை, திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

மே 6ம் தேதி, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, ஈரோடு, தேனி, திண்டுக்கல், தென்காசி, மயிலாடுதுறை, நாகபட்டினம், தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

மே 7ம் தேதி, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். மே 8ம் தேதி, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

மே 9ம் தேதி, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று வேளாண்மை, உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் அனைத்து துறைத்தலைவர்களுடன் வேளாண்மை, உழவர் நலத்துறையின் அறிவிப்புகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆணையர் வி.தட்சிணாமூர்த்தி, இயக்குநர் பி.குமரவேல்பாண்டியன், ஆணையர் டி.ஆப்ரகாம், இயக்குநர் டி.அன்பழகன், துணைவேந்தர் ஆர்.தமிழ்வேந்தன், வேளாண்மை பொறியியல் துறை தலைமை பொறியாளர்கள் இரா. முருகேசன், தலைமை பொறியாளர் சந்திரசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. நிர்வாகிகள் பொறுப்புணர்ந்து பேசுங்கள்:

# முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை

சென்னை, மே 04-

சமூக வலைத்தளங்களில் பொறுப்புணர்ந்து பேச வேண்டும் என்று தி.மு.க. நிர்வாகிகளுக்கு முதல்வர் ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நேற்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்துக்கு முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க. ஸ்டாலின் தலைமை தாங்கினார். தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன், முதன்மை செயலாளர் கே.என்.நேரு, பொருளாளர் டி.ஆர்.பாலு, துணை பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி, அந்தியூர் செல்வராஜ், ஆ.ராசா, கனிமொழி, திருச்சி சிவா. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, டி.கே.எஸ். இளங்கோவன் உள்பட மூத்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர். தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் 76 பேரும் கூட்டத்துக்கு வந்து இருந்தனர்.

இந்நிலையில் இந்த கூட்டத்தில்," சமூக வலைத்தளங்களில் தி.மு.க. நிர்வாகிகள் பொறுப்புணர்ந்து பேச வேண்டும்" என நிர்வாகிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், " கேமராக்கள் நம்மை சுற்றி இருப்பதை அறிந்து, பொறுப்புணர்வுடன் பேச வேண்டும். தி.மு.க. அரசின் சாதனைகளை மக்களிடம் அதிகம் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு நிர்வாகிகளுக்கு தான் உள்ளது. அதனால், சமூக வலைத்தளங்களில் தி.மு.க. நிர்வாகிகள் பொறுப்புணர்ந்து பேச வேண்டும்" என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# மனிதகுலத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் 'பயங்கரவாதம்'

## பிரதமர் மோடி பேச்சு

புதுடில்லி, மே 04-

பயங்கரவாதம் மனிதகுலத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் ஆகும். இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க இந்தியாவும், அங்கோலாவும் உறுதி பூண்டுள்ளன" என பிரதமர் மோடி தெரிவித்தார்.

அங்கோலா அதிபர் ஜோவோ மானுவல் கோன்கால்வ்ஸ் லோரென்கோ, 3 நாள் பயணமாக நேற்று (மே 03) டில்லி வந்தடைந்தார். ஜனாதிபதி மாளிகைக்கு வருகை தந்த அங்கோலா அதிபர் ஜோவோ மானுவலுக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. அவரை ஜனாதிபதி முர்மு மற்றும் பிரதமர் மோடி வரவேற்றனர்.

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருடன் அங்கோலா அதிபர் சந்திப்பு நடத்தினார்.

இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து இருநாட்டு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர். பின்னர் அவர் பிரதமர் மோடியுடன் ஆலோசனை நடத்தினார். பின்னர் பிரதமர் மோடி மற்றும் அங்கோலா அதிபர் ஜோவோ மானுவல் கூட்டாக நிருபர்களை சந்தித்தனர்.

அப்போது பிரதமர் மோடி கூறியதாவது: பயங்கரவாதம் மனிதகுலத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் ஆகும். பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க இந்தியாவும், அங்கோலாவும் உறுதி பூண்டுள்ளன. எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு எதிரான எங்கள் போராட்டத்தில் அங்கோலா அளித்த ஆதரவிற்கு நன்றி. இந்தியாவும், அங்கோலாவும் தங்கள் ராஜதந்திர கூட்டாண்மையின் 40வது ஆண்டு நிறைவு செய்துள்ளது. அங்கோலா தனது சுதந்திரத்திற்காகப் போராடியபோது, இந்தியா அவர்களுக்கு ஆதரவாக நின்றது.

கடந்த 10 ஆண்டுகளில், ஆப்பிரிக்க நாடுகளுடனான இந்தியாவின் வர்த்தக உறவு அதிகரித்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில், ஆப்பிரிக்காவில் 17 புதிய தூதரகங்களைத் திறந்துள்ளோம்.

ஆப்பிரிக்காவிற்கு 12 பில்லியன் டாலர் மதிப்புள்ள கடன் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆப்பிரிக்க நாடுகளுக்கு 700 மில்லியன் டாலர் மானியங்களும் வழங்கப்பட்டுள்ளன. ஆப்பிரிக்காவில் 8 நாடுகளில் தொழில் பயிற்சி மையங்களைத் திறந்துள்ளோம். ஐந்து நாடுகளில் டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பை உருவாக்குவதில் நாங்கள் உதவுகிறோம்.

இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

# அக்னி நட்சத்திரம் இன்று... (1-ம் பக்க தொடர்ச்சி)

பல்வேறு வழிகாட்டு நெறிமுறைகளுடன் தமிழக அரசு ஆலோசனையை வெளியிட்டுள்ளது. வெப்பநிலை அதிகருத்து வருவதைக் கருத்தில் கொண்டு, பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ இயக்குநரகம் பொதுமக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு விரிவான வழிகாட்டு ஆலோசனையை வழங்கியிருக்கிறது.

அதன்படி, மக்கள் நாள் முழுவதும் நிறைய தண்ணீர் குடிக்கவும், முடிந்தவரை நேரடியாக சூரிய ஒளியில் இருப்பதைத் தவிர்க்க வேண்டும். சூரியன் உச்சத்தில் இருக்கும் மதியம் 12 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை மக்கள் வீட்டிற்குள் இருக்க வேண்டும். அவசியம் வெளியில் செல்ல நேரிடும்போது, பாதுகாப்புக்காக குடை அல்லது தொப்பிகளைப் பயன்படுத்துவதையும், வெய்யில் உச்சமடையும் நேரங்களில் வெளியில் செல்வதை தவிர்க்கவும்.

வெய்யிலில் நிறுத்தப்பட்டுள்ள கார் போன்ற வாகனங்களுக்குள் குழந்தைகள் அல்லது செல்லப்பிராணிகளை விட்டுச் செல்வது கூடாது, ஏனெனில் வெய்யிலில் நிறுத்தப்படும் வாகனத்தின் உள்புற வெப்பநிலை ஆபத்தான முறையில் உயரக்கூடும். உடலில் நீர்ச்சத்து குறைவதற்குக் காரணமாக காபி, டீ மற்றும் மதுபானங்களை உட்கொள்வதைக் குறைத்துக்கொள்ளுமாறு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வீட்டிற்குள் இருந்தாலும் உடல் வெப்பம் அதிகரிப்பதைக் தடுக்க, மதிய நேரங்களில் சமைப்பதைத் தவிர்க்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சூடான தரையில் வெறுங்காலுடன் நடப்பதையும், அதிக புரதம் அல்லது காலாவதியான உணவுகளை உட்கொள்வதையும் தவிர்க்க வேண்டும்.

உடலுக்கு நீர்ச்சத்து கிடைக்க, வீட்டில் தயாரிக்கப்பட்ட பானங்களான எலுமிச்சை தண்ணீர், மோர், லஸ்ஸி மற்றும் பழச்சாறுகள் போன்றவற்றை ஒரு சிட்டிகை உப்புடன் சேர்த்து குடிக்கலாம்.

மேலும், நீர்ச்சத்து நிறைந்த தர்பூசணி உள்ளிட்ட பழங்கள் மற்றும் காய்கறிகளை உணவில் சேர்த்துக் கொள்ளவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

### இலங்கை கடற்கொள்ளையர்கள் மீண்டும் அட்டூழியம்:

# 14 தமிழக மீனவர்கள் காயம்

வேதாரண்யம், மே 04-

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்கியதில் 14 பேர் காயமடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

நாகை மாவட்டம், அக்கரைப்பேட்டை. செருதூர், வெள்ள பள்ளம் பகுதிகளைச் சேர்ந்த பிரவீன் (24) உள்ளிட்ட 5 மீனவர்கள் நாகையில் இருந்து கண்ணாடியிழைப் படகில் வியாழக்கிழமை கடலுக்குள் மீன் பிடிக்கச் சென்றுள்ளனர். கோடியக்கரைக்கு தென்கிழக்கே கடலில் வலை விரித்து மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு ஆறு இலங்கைப் படகுகளில் வந்த தமிழ் பேசிய 15-க்கும் மேற்பட்ட இலங்கை கடற்கொள்ளைர்கள் மீனவர்களை இரும்பு கம்பி,கட்டையால் தாக்கியதுடன் அறிவாளால் வெட்டி படகில் இருந்த மீன், மீன்பிடி வலைகள், ஜிபிஎஸ் கருவிகள், செல்போன்கள், யமஹா எஞ்சின் என பல லட்சம் மதிப்பிலான உபகரணங்களை கொள்ளையடித்துச் சென்றனர்.



இதையடுத்து பாதிக்கப்பட்ட மீனவர்கள் அளித்த தகவலின் அடிப்படையில் வெள்ளப்பள்ளம் கிராமத்தில் இருந்து படகில் கடலுக்கு சென்ற மீனவர்கள், மோட்டார் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்த மீனவர்களை மீட்டு படகையும் கட்டி இழுத்து சனிக்கிழமை காலையில் வெள்ளப்பள்ளம் கிராமத்தில் கரை சேர்த்தனர். இலங்கை கடற்கொள்ளைர்கள் தாக்குதலில் தலையில் பலத்த காயமடைந்த மீனவர் குட்டியாண்டி உள்ளிட்ட 5 பேரும் 108 வாகனத்தின் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு நாகை ஒரத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து கடலோர காவல் நிலைய போலீஸார், தனிப்பிரிவு போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# எல்லையில் 9-வது நாளாக துப்பாக்கிச்சூடு: பாகிஸ்தானுக்கு இந்திய ராணுவம் பதிலடி

ஸ்ரீநகர், மே 04-

தொடர்ந்து 9-ஆவது நாளாக பாகிஸ்தான் ராணுவத்தினர் துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட நிலையில், இந்திய ராணுவ தரப்பில் தக்க பதிலடி தரப்பட்டதாக ராணுவ அதிகாரி சனிக்கிழமை தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் 22-ஆம் தேதி நடந்த பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் எதிரொலியாக, சிந்து நதி நீர் ஒப்பந்தம் நிறுத்திவைப்பு உள்பட பாகிஸ்தான் மீது இந்தியா ராஜீய ரீதியில் பல்வேறு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இந்த அறிவிப்புகள் வெளியான சில மணிநேரங்களுக்கு பின்னர் (கடந்த 24-ஆம் தேதி இரவு), எல்லையில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி பாகிஸ்தான் ராணுவம் அத்துமீறி துப்பாக்கிச் சூடு நடத்தியது.

அதன் பிறகான நாள்களிலும் இரவு நேரத்தில் பாகிஸ்தான் ராணுவத்தினரின் அத்துமீறல் நீடித்து வருகிறது.

தொடர்ந்து 9-ஆவது நாளாக வெள்ளிக்கிழமை இரவிலும் ஜம்மு காஷ்மீரின் குப்வாரா, உரி மற்றும் அக்னூர் செக்டார்களிலும், பாகிஸ்தான் ராணுவம் கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு அருகில் பாகிஸ்தான் ராணுவத்தினர் துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட நிலையில், இந்திய தரப்பில் தக்க பதிலடி தரப்பட்டதாக ராணுவ அதிகாரி சனிக்கிழமை தெரிவித்தார்.

இருப்பினும் இந்த தாக்குதலில் உயிர்சேதம் ஏற்பட்டதற்கான உடனடி தகவல்கள் இல்லை. பாரமுல்லா மற்றும் குப்வாரா மாவட்டங்களின் எல்லையையொட்டிய பகுதிகளைத் தொடர்ந்து பூஞ்ச் மற்றும் அக்னூர் செக்டார்களிலும் அத்துமீறி துப்பாக்கிச் சூட்டில் பாகிஸ்தான் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.



மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் சித்திரை திருவிழாவின் 5-ம் நாளான நேற்று சுவாமியும், அம்மனும் தங்க குதிரை வாகனத்தில் வீதிஉலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.